விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 17 வெள்ளிக்கிழமை (01.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 013

## இலங்கையில் 13ஆவது திருத்தத்தை காப்பாற்ற தலையிடுங்கள்

### மோடியை வலியுறுத்தும் தி.மு.க



(சென்னை)
இலங்கையில் மாகாண சபை முறைகளை ஒழிக்கும் நடவடிக்கையை நிறுத்த பிரதமர் நரேந்திர மோடியின் தலையீட்டை கோரியுள்ளார் தி.மு.கவின் பொருளாளரும் பாராளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு.
இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவ

19

5 ஆயிரத்துக்கு மேற்பட்டோர்

## யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில்

### அரச அதிபர் மகேசன்



06ஆம் பக்கம் பார்க்க

## மருதனார்மடம் உட்பட வடக்கில்

# சந்தைகளை மீள திறப்பது ஆபத்தானது

### வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரைக்கும் மருதனார்மடம் சந்தை உட்பட வட மாகாணத்தில் சந்தைகளை மீளத் திறப்பது ஆபத்தானது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)




## 20 ரூபாய் நாணயக் குற்றி வெளியீட்டப்பட்டது



(கொழும்பு)
இலங்கை மத்திய

19

## புதைக்கப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

### அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
இளம் பெண் ஒருவருக்குப் பிறந்த சிசுவை மண்ணுக்குள் புதைத்தமை தொடர்பில் சம்பவ இடத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை

19

சுமந்திரனின் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன்

## கட்சித் தலைமைக்கு எதிராக செயற்படுவதற்கு நடவடிக்கை

### மாவை சேனாதிராஜா அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)
எம்.ஏ.சுமந்திரன் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களை நான் நிராகரிக்கிறேன். அவர் கட்சித் தலைமைக்கு

19

## இரணைமடுவின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டன

(முறிகண்டி)
வன்னியில் தொடரும் மழையால் இரணைமடுக் குளத்திற்கான நீர் வரத்து தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

19



அருவியாற்றில் காணாமல்போன

## கிராமசேவகரின் சடலம் நேற்று கரையொதுங்கியது

(மன்னார்)
அருவியாற்றுப் பாலத்தின் அடியில் சமையல் செய்து வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் ஆற்றில் குளிக்க முற்பட்டபோது

19

## கொரோனாவுக்கு நேற்றும் 5 பேர் பலி

### +597 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 பேரைத் தாண்டியுள்ளது. மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர்

19

## மருதனார்மடம் கொத்தணி உடுவிலைச் சேர்ந்த பெண்ணுக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணியில் உடுவிலைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவருக்கு தொற்று

19

## முதல்வருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனம் தேவையில்லை

### ஆணையாளருக்கு அறிவித்தார் மாநகர முதல்வர் மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)
மாநகர முதல்வருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனம் தேவையில்லை

19

## கையூட்டு பெற்ற அரச அதிகாரி கைது

(கிளிநொச்சி)
நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர்

19

# கொரோனாத் தொற்றாளர்கள் ஐவர் தப்பியோட்டம்

(பொலன்னறுவை)

பொலன்னறுவையில் அமைந்துள்ள கல்லேல்ல கொவிட் சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பிச் சென்ற 5 பேரில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிலாபம், தெமடபிட்டிய பகுதியில் வைத்து குறித்த நபர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஞா)


## கண்ணீர் அஞ்சலி




யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் முதலாவது செயலாளரும் லயன் **சயந்தனின்** தந்தையார்

**பொன்னம்பலம் மகேந்திரராஜா**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகம்

(5141)

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



தோற்றம் 06 . 05 . 1940

மறைவு 27 . 11 . 2020

அமரர்

**கந்தையா இந்திரன்**

**(பிரபல கரப்பந்தாட்ட வீரன், வாகன உடற்கோர்ப்பு விற்பன்னர்)**

கடந்த 27.11.2020 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு அமரர் கந்தையா இந்திரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.01.2021 ) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று செல்வச்சந்நிதி புனித ஆற்றங்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம மோட்ச சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தமிழ்வளர் சோலை
அறிவாலயம்,
இமையாணன் உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(C-1065)

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியர்
திரு. ம. சயந்தறூபன் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்

**பொன்னம்பலம் மகேந்திரராஜா**

அவர்கள் 31.12.2020 இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

பாடசாலைச் சமூகம்
யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்

(C-1066)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்



பிறப்பு 26 04 1945

இறப்பு 31 12 2020

அமரர்

**திரு. நல்லதம்பி கணேசலிங்கம்**

உசன் மிருசுவிலை பிறப்பிடமாகவும், 2ம் யூனிற் பாவற்குளம் மற்றும் 2ம் குறுக்குத் தெரு வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட காலம் சென்ற நல்லதம்பி நாகமுத்து தம்பதியினரின் மூத்த மகனும் காலம் சென்ற செல்லையா தெய்வானைபிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆகிய நல்லதம்பி கணேசலிங்கம் அவர்கள் இறைவனடி சேர்ந்தார் அன்னார் மகேஸ்வரியின் அன்பு கணவரும் கலாநிதி. (Coventry) குமணன். (Slough) கவிதினி. (ஆசிரியை Vavuniya )அகிலன். (Bromley) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும். கனகேஸ்வரி. கனகலிங்கம். கருணேஸ்வரி. கமலேஸ்வரி. விமலேஸ்வரி. அமிர்தலிங்கம். சுந்தரலிங்கம். இராசலிங்கம். அன்னலிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரனும் சிவபாக்கியம் அவர்களின் உடன் பிறவா சகோதரனும் உருத்திரன். லதாங்கி. சந்திரதாசன். அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் யஸ்வினன். . ஜிவேசன். லக்ஸ்மிதா. கிர்த்திக். சரண்யன். கிஷோபன். அகஸ்தினி. ஷானுயா. ரொஷீபன் ஆகியோரின் அன்பு தாத்தாவும் வல்லிபுரம். காலம் சென்ற புவனேஸ்வரி. வினாயகசேந்திரம். இராசரட்ணம். பாலசோதி. தயாநிதி. வசந்தி. சியாமளா காலம் சென்றவர்களான பரமேஸ்வரி. சரஸ்வதிபிள்ளை. மற்றும் திருச்செல்வம். நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

*கிரியை 01/01/2021 அன்று 201, 2ம் குறுக்குத் தெரு வவுனியால் நடைபெறும்*

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்
**0774723549**

(C-1155)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி
**பவானந்த சர்மா ஸ்ரீபவனுஜா**
யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்




செல்வன்
**விஜயானந்த சர்மா ஷைலானந் சர்மா**
யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்



செல்வன்
**சுதானந்த சர்மா ஸ்ரீ நித்தியானந்த சர்மா**
யா/உடுவில் மகளிர் கல்லூரி

**150 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

எமது அங்கத்தவர்களின் பிள்ளைகள் நடைபெற்ற 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையினைப் பாராட்டி வாழ்த்தி அவர்கள் மென்மேலும் கல்வியில் உயர இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்.
மகாலஷ்மி அதிஷ்டசீட்டுத் திட்டம்,
முத்துமாரி மரவாணியம்.

தெல்லிப்பழை வீதி,
மாவடி, வட்டுக்கோட்டை.

(5132)

# ஆயிரம் தேசிய பாடசாலைகள் அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

**நாட்டில் சகல வசதிகளுடன் கூடிய ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தனபுர கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்கும் விடயத்தில் கணனி தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மொழிக்கல்வி உள்ளிட்ட வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் நாட்டில் அமைக்கப்படும் புதிய தேசிய பாடசாலைகள் இந்த அனைத்து வசதிகளையும் வழங்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ், ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல கட்டங்களாக இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

முதலாம் கட்டத்தில் 123 பாடசாலைகளும், இரண்டாம் கட்டத்தில் 673 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வவுனியா பிரதேச செயலருடன் கஜேந்திரன் எம்.பி.கலந்துரையாடல்



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பிரதேச செயலாளர் ந. கமலதாசனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசிகுளம், பிலவு வீதி மக்களின் விவசாயக்காணிகளை வன இலாகாவினர் கையகப்படுத்துகின்றமை, கற்குளம் -3, கற்குளம்-4 மற்றும் மதுரா நகர் பகுதி மக்களின் காணி உறுதிப்பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், இது தொடர்பில் மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (ஜ-5-250)

# உலகில் இல்லாத ஒன்றை முஸ்லிம் மக்கள் கேட்கவில்லை

## நீதியமைச்சர் காட்டம்



(கொழும்பு)

உலகில் இல்லாத ஒன்றை முஸ்லிம் மக்கள் கேட்கவில்லை என்று நீதியமைச்சர் அலி சப்ரி காட்டமாக பதிலளித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்தவர்களை தகனம் செய்வது தொடர்பில் தற்போது கடும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனாவினால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்பது முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமான கோரிக்கையல்ல.

உலகில் 195 நாடுகளில் தகனம் செய்யவும் அடக்கம் செய்யவும் அனுமதி வழங்கி இருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனமும் அதனை அனுமதித்திருக்கின்றது. அதனடிப்படையிலேயே எந்த நிபந்தனையிலாவது அடக்கம் செய்ய கோருபவர்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

அது முஸ்லிம்களுக்கு மாத்திரம் வழங்கவேண்டும் என யாரும் தெரிவிக்கவில்லை. அத்துடன் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் அதன் மூலம் வைரஸ் பரவும் என தெரிவிப்பவர்கள் அதனை விஞ்ஞான அடிப்படையில் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# யானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங்குளம் கிராமத்தில் யானைகள் தொடர்ச்சியாக அழிவுகளை ஏற்படுத்தி வருவதாக கிராம மக்களால் துணுக்காய் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

1965 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் விவசாயத்தினை நம்பியே குடும்பங்கள் உள்ளன.

இரவுவேளைகளில் தென்னியங்குளத்தின் அணைக்கட்டிற்கு வருகைதரும் யானைகள் அணைக்கட்டினையும் மற்றும் வாய்க்கால்களையும் சேதப்படுத்துவதுடன் வயல் நிலங்களுக்குள் நுழைந்து நெற்பயிர்களையும் அழித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தென்னியங்குளம் மக்கள் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஜ-5-350)

# நாட்டில் 40 ஆயிரம் போலி மருத்துவர்கள்

(கொழும்பு)

சுமார் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட போலி மருத்துவர்கள் உள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த தகவல் தெரியவந்துள்ளது.

இவ்வாறு மருத்துவர்களாக கடமையாற்றி வருவோரில் பெரும்பான்மையினர் சுதேச மருத்துவ அமைச்சிலோ அல்லது இலங்கை மருத்துவ பேரவையிலோ தங்களை பதிவு செய்து கொள்ளாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தொடர்ச்சியான மழைவீழ்ச்சி பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(பரந்தன்)

தொடர்ச்சியான மழைவீழ்ச்சி பதிவாகி வரும் நிலையில் உமையாள்புரம் விளாவோடை செல்லும் வீதியின் குறுக்காக வெள்ள நீர் கடந்து வருகின்றது.

குறித்த பாலத்தின் ஊடாக போக்குவரத்து செய்யும் மக்களை அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின்போது வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் முறையான கட்டமைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைவாக பரவலாக வெள்ள நீர் கடக்காது முறை யான நீரோட்டங்கள் அபிவிருத்தி செய்யப் பட்டது.

வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ள நிலையில் குறித்த பாலத்திற்கு அதிகளவான நீர் கடந்து செல்வதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அதிளவில் ஊடறுத்து செல்லும் வெள்ள நீரினால் குறித்த வீதியின் கீழ்ப்பகுதி அரிப்பெடுத்துள்ளமையால் அவ்வீதி ஊடாக பயணிப்பது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர்முகாமைத் துவ நிலையம் எச்சரித்துள்ளது. (ஜ-5-100-312)



# பண்டிகைகளின் போது ஒன்றுகூடலை தவிருங்கள்

## தொற்று நோயியல் பிரிவு வேண்டுகோள்

**(கொழும்பு)**

**புது வருடப்பிறப்பு மற்றும் அதன் பின்னரான பண்டிகைகளை வழமையைப் போன்றல்லாமல் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி கொண்டாடுமாறும், இயன்றளவு மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், புது வருடப்பிறப்புடன் ஏனைய சில பண்டிகைகளையும் கொண்டாடும் காலம் இதுவாகும். எனினும் நாட்டில் கொவிட்-19 பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் வழமையைப் போன்று அவற்றை கொண்டாட முடியாது.

அண்மையில் சில பண்டிகைகளை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாமல் கொண்டாடியமையே பல கொத்தணிகள் உருவாகக் காரணமாக அமைந்தது.



இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே பல கொத்தணிகள் உருவாகுவதற்கான வாய்ப்புகளும் அதிகமுள்ளன. எனவே தனிமைப்படுத்தல் விதிகளைப் பின்பற்றி பண்டிகைகளை கொண்டாடுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது சிவனொளி பாதமலை யாத்திரையும் ஆரம்பித்துள்ளது. ஏப்ரல் மாதம் வரை இந்த யாத்திரை தொடரும். எனவே பக்தர்களிடம் நாம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இம்முறை அந்த யாத்திரைக்குச் செல்வதை இயன்றளவு குறைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக முதியோர், நாட்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இதனை தவிர்த்துக் கொள்வதே உகந்ததாகும் என தெரிவித்தார். (ஜ)

# மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலிருக்கவே தீர்மானம்

## சுசில் தகவல்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபை தேர்தலை நடத்தாமலிருக்கவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தலை நடத்துவதாயின் இரண்டு பிரதான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என தொலைநோக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து தற்போது பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுகிறது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் முதல் அலையினை அரசாங்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதால் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் கொவிட்-19 வைரஸ் இரண்டாம் அலை குறுகிய காலத்துக்குள் தீவிரமடைந்துள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஊடக அடையாள அட்டையின் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ வினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடித்தல், இந்த ஆண்டுக்கான ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கான அடிப்படை அலுவல்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக கடந்த டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி 2205/17 இலக்கத்தின் கீழான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பப்பத்திரம் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப் படிவத்தை www.dgi.gov.lk என்ற அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அல்லது www.news.lk என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

இதேபோன்று 2020 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலம் நேற்று தொடக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக மேலும் அறிவிக்கின்றோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அளவுக்கு மிஞ்சினால்!

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்லுவார்கள். அது உண்மை தான். ஒருத்தருக்கு அளவுக்கு மீறிய புகழ் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதுகூட ஆபத்தாக போய் விடுகின்றது உண்டு.

பழங்காலத்திலேயெல்லாம் கிரேக்க தேசத்திலே ஒரு பழக்கம் உண்டாம். அதாவது யாராவது ஒருத்தரை நாடுகடத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் பெயரை ஒரு மண்பாண்ட ஓட்டுச் சில்லிலே எழுத வேண்டியது. அதை ஒரு குறிப்பிட்ட பொது இடத்திலே போட்டுவிட வேண்டியது அவ்வளவுதான். இது மாதிரி பல பேர் போட்டுக் கொணடு இருப்பார்கள். எல்லாம் குவிந்து கிடக்கும்.

அந்த ஓட்டுச்சில்லு குவியலில் யாருடைய பெயர் அதிகமாக இருக்கின்றதோ அந்த நபரை ஒரு பத்து ஆண்டுகள் நாடு கடத்தி விடுவார்கள். அது அந்த ஊர் பழக்கம்.

ஒரு நாள் அந்தக் குவியலுக்குப் பக்கத்திலே ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலே ஒரு ஓட்டாஞ்சில்லு வைத்துக் கொண்டிருந்தான். அதிலே யார் பெயரையோ எழுதி அந்த இடத்திலே போட வேண்டும் என்று ஆசை..ஆனால் அவன் படிக்காதவன். அதனால் எழுதத் தெரியவில்லை. யாராவது அந்த வழியாக வருகின்றார்களா? என்று பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான்.

ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் ஓடினான். கையிலே இருந்த மண்பாண்டச் சில்லை கொடுத்தான். ஐயா இதிலே ஒரு பேர் எழுதிக் கொடுங்களேன் என்றான். அந்தப் பெரியவர் அதை வாங்கி கையில் வைத்துக் கொண்டு என்ன பெயர் எழுத வேண்டும் சொல்லு என்றார்.

இவன் சொன்னான்... அரிஸ்டோட்டில் என்று எழுதுங்கள் என்றான். இதைக் கேட்டதும் அந்தப் பெரியவருக்கு அதிர்ச்சி. ஏன் தெரியுமா?

அவர்தான் அரிஸ்டோட்டில். தத்துவ மேதை அரிஸ்டோட்டில்.

இருந்தாலும் தான் அது என்பதைக் காட்டிக் கொள்ளாமலே அந்த ஆளிடம் கேட்டார்.

அது சரி...அரிஸ்டோட்டில் உனக்கு என்ன கெடுதல் செய்தார். அவர் பேரை இதிலே எழுதச் சொல்கின்றாயே? ஏன் என்று கேட்டார்.

அவர் எனக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை. அவரை நான் பார்த்தது கூட இல்லை என்றான் அந்த ஆள்.

பின்பு எதற்காக அவரை நாடு கடத்த வேண்டும் என்று நீ ஆசைப்படுகின்றாய்? என்று கேட்டார் அரிஸ்டோட்டில். இப்பொழுது அந்த ஆள் சொன்னான்.

அரிஸ்டோட்டிலைப் பற்றி எல்லோரும் பேசுகின்றார்கள். அவர் மிகவும் நல்லவர். அவர் ஒரு பெரிய அறிவாளி என்கின்றார்கள். அவர் பெரிய வள்ளல், பேரறிஞர் இப்படி எல்லோரும் சொல்வதைக் கேட்டுக் கேட்டு எனக்கு மிகவும் அலுத்துப் போய்விட்டது.

அதனால் தான் வெறுப்பாகிவிட்டேன் என்றாராம்.

நாம் நல்லவனாக இருப்பதிலே ஒன்றும் இடைஞ்சல் இல்லை. ஆனால் எங்களை நல்லவன் நல்லவன் என்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள் என்றால் இடைஞ்சல் ஆரம்பம் என்று அர்த்தம். எதுவுமே அளவுக்கு மிஞ்சிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அளவுக்கு அதிகமாக ஆசைப்படாதவர்களிலே ஆபிரகாம் லிங்கனும் ஒருத்தர். அவர் ஒரு தடவை தன்னுடைய நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தாராம். ஒருத்தர் கேட்டிருக்கின்றார்...ஒரு மனிதனுக்கு கால்கள் எவ்வளவு உயரம் இருக்க வேண்டும்? என்று கேட்டாராம்.

இதற்கு ஆபிரகாம் லிங்கன்... இடுப்பிலி ருந்து தரையைத் தொடுகின்ற அளவுக்கு உயரம் இருந்தால் போதும் என்றாராம்.


பலமான சக்திகள்
ஒன்றிணைந்து டிஜிட்டல் தொழில்நுட்ப வரலாற்றை உருவாக்குகின்றன
அனைத்து இலங்கையர்களும் இதற்கு முன்னர் அனுபவித்திராத டிஜிட்டல் தொடர்பாடல் அனுபவத்தை வழங்கி, உங்கள் வாழ்க்கையிலும் தொழில்சார் எதிர்பார்ப்புக்களை மிக இலகுவாகவும் செயற்திறன் மிக்க வகையில் செய்துகொள்வதற்கான பின்னணியை வழங்க ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் மொபிடெல் சேவைகள் இணைந்து புதிய பயணத்தை இன்று ஆரம்பிக்கின்றன.
எங்களுடன் டிஜிட்டல் தொலைத்தொடர்பு புதுப் பாதையில் பயணிக்கும் உங்களுக்கு இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

# யாழில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தனிமைப்படுத்தலில்- அரச அதிபர்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் 5,731 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 149 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய 26 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகிய சுமார் 2 ஆயிரத்து 35 குடும்பங்களைச் சேர்ந்த 5,731 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தொடர்ச்சியாக 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இரண்டு தடவைகளில் அந்தந்த பிரதேச செயலகத்தினூடாக வழங்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் ஊடாக குறித்த நிதியினைப் பெற்று அதற்குரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் தெரிவித்தார். (5-33)

# மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, ஆசிகுளம், பகுதியில் உள்ள விவசாயக் காணிகளை வன இலாகாவினர் கையகப்படுத்துவதாக அப்பகுதி மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.


மனித உரிமை ஆணைக் குழுவின் வவுனியா காரியாலயத்தில் நேற்றுக் காலை குறித்த முறைப்பாட்டினை அப்பகுதி மக்கள் மேற்கொண்டனர்.

வவுனியா, ஆசிகுளம், பிலவு பகுதியில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக மக்கள் விவசாயம் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, பின்னர் மீள்குடியேறி காணிகளை துப்புரவு செய்து மீளவும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், வன இலாகாவினர் குறித்த காணிகளில் காட்டு மரங்களை நாட்டியுள்ளதுடன், அக்காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டாம் எனவும் கால்நடைகளை மேயவிட வேண்டாம் எனவும் அச்சுறுத்தி வருவதாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது காணிகளை மீள தமக்கு பெற்றுத் தருவதுடன் விவசாய நடவடிக்கைக்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறும் கோரியே மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 38 பேர் சார்பாக குறித்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. அக்கிராம மக்களுடன் இணைந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் செல்வநாயகம் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

விவசாய நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தமது விவசாய காணிகளை மீட்டுத் தருவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அம்மக்கள் இதன் போது கோரிக்கை விடுத்தனர். (5-250)

# கால்நடைகள் இறப்பிற்கு காரணமறிய பரிசோதனைகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் கால்நடைகள் தொடர்ச்சியாக உயிரிழந்து வருகின்றன. இந்நிலையில் இறப்புக்கான காரணத்தை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாடுகளின் மாதிரிகளைப் பெறுவதற்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் விலங்கு நோய் ஆய்வு நிலையத்தின் பிரதான வைத்திய அதிகாரி விஜித்த பண்டார தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி கோணாவில் பகுதிக்கு வருகை தந்து இறந்த மாட்டின் நுரையீரல், சாணகம், கல்லீரல், பெருங்குடல், சிறுகுடல், இதயத்தைச் சுற்றியுள்ள திரவம் என்பவற்றை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர். (5-316)

# திருவாசக முற்றோதல்

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும்.

காலை 5 மணியளவில் தீபாராதனை வழிபாடுகளுடன் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

தற்போதைய கொரோனா வைரஸ் நிலைமையைக் கருத்திற் கொண்டு எளிமையான முறையில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-18)



குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தினால் (பலெர் மோ இத்தாலி) நத்தார் பண்டிகையை முன்னிட்டு குருநகர் சனசமூக நிலையத்தில் பெண் தலைமைத்துவத்தை கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பத்தினருக்கு தலா மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ஞா.லூயிஸ் அன்ரனி தலைமையில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்:-ஏர்னஸ்ட்)




கொவிட் 19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்கள் உள்ளிட்டோரின் சடலங்கள் தகனம் செய்யப்படுவதற்கு எதிராக நேற்று மன்னாரில் அமைதி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் , மன்னார் நகர மற்றும் பிரதேச சபையினர் சட்டத்தரணிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் எனப் பலரும் கலந்து கொண்டனர். போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதிக்கு கிடைக்கும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

## திரு.கந்தையா ஏகாம்பரம்



தோற்றம் 12.01.1934 மறைவு 31.12.2020

புலவனார் வீதி முக்குறுணுப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இல.37, இராஜவீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியும் நல்லூர் சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் முன்னை நாள் தலைவருமாகிய கந்தையா ஏகாம்பரம் அவர்கள் 31.12.2020 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற சண்முகலிங்கத்தின் அன்புச் சகோதரரும் நாகேந்திரா, தேன்மதி (கனடா), கிரிஜா (அவுஸ்திரேலியா) பாலேந்திரா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலதி, சூரியகுமாரன், ஜெகநாதன், கிரிஷாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாந்தரூபன், சாஹினி, பிரகாஸ், பரணிகா, சுஜேந்திரா, பிரஷாந்தி, நிரோஸ், தர்சன், ஜெய்சன், திவ்யா, லக்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சுரபி, அகர்வின், ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.01.2021 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் 37, இராஜவீதி நல்லூரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்பு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: நாகேந்திரா - 0778736725, சூரியகுமார் - +16473030199
ஜெகநாதன் - +61413816266, பாலேந்திரா-0014164585756 (5130)

இல.37, இராஜ வீதி, நல்லூர். தகவல்: குடும்பத்தினர்

# மு/விசுவநாதர் ஆரம்பப்பாடசாலை

## தரம் 05 புலமைசார் பரீட்சையில் சிகரம் தொட்ட சிறுதளிர்களின் மேன்மையை போற்றுகின்றோம் 2020

## விசுவமடு முல்லைத்தீவு.



| அதிபர் | பிரதி அதிபர் | வகுப்பாசிரியர் | வகுப்பாசிரியர் | வகுப்பாசிரியர் |
|---|---|---|---|---|
| திரு.யோ.மகேஸ்வரன் | திருமதி.தெ.வீரசிங்கம் | திரு.க.கவாஸ்கர் | திருமதி.ச.சத்தியஸ்வரன் | திருமதி.மே.கோபாலகிருஸ்ணன் |



| செ.சயந்தன் | பி.கவித் | நே.நிவர்ஜிதா | அ.அபிசன் | தா.துளசிகா | சு.சுருதி | வி.லிந்துஜன் | சு.கபின்சன் |
|---|---|---|---|---|---|---|---|
| **புள்ளி-192** | **புள்ளி-191** | **புள்ளி-191** | **புள்ளி-190** | **புள்ளி-190** | **புள்ளி-188** | **புள்ளி-187** | **புள்ளி-186** |



| சு.ஜதுரிஷா | ச.சாதுரியன் | ர.அக்ஷனா | அ.டென்சிகா | கி.பரணிதரன் | க.துளசியன் | ரா.ஜான்ஸ்பிரியா | பு.லுகிர்தன் |
|---|---|---|---|---|---|---|---|
| **புள்ளி-186** | **புள்ளி-182** | **புள்ளி-181** | **புள்ளி-180** | **புள்ளி-178** | **புள்ளி-178** | **புள்ளி-178** | **புள்ளி-177** |



| இ.மதுசாந் | த.பவித் | செ.தமிழினி | ப.தரணிகன் | சி.துர்சனா | சி.கேருஷான் | டி.டிகல்யா | சு.ரிசாந் |
|---|---|---|---|---|---|---|---|
| **புள்ளி-176** | **புள்ளி-176** | **புள்ளி-175** | **புள்ளி-175** | **புள்ளி-174** | **புள்ளி-173** | **புள்ளி-172** | **புள்ளி-170** |



| சு.திவ்யா | ர.றஸ்வினி | யோ.விஷால் | அ.பவித்திரா | ஜெ.சர்ஜன் | ஜெ.டனுசியா | வி.அபிசன் | சி.மதுசாளினி |
|---|---|---|---|---|---|---|---|
| **புள்ளி-169** | **புள்ளி-169** | **புள்ளி-169** | **புள்ளி-168** | **புள்ளி-168** | **புள்ளி-167** | **புள்ளி-167** | **புள்ளி-166** |



| வி.லிதுர்சிகா | சூ.சஸ்வினி | சு.லக்ஷிகா | ச.அபிதா | கோ.தனுசியன் | கு.திஷானி | த.டசிந்தன் |
|---|---|---|---|---|---|---|
| **புள்ளி-165** | **புள்ளி-164** | **புள்ளி-163** | **புள்ளி-162** | **புள்ளி-162** | **புள்ளி-161** | **புள்ளி-160** |

### 88 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| த.தருண்யா | 158 | யோ.நிதர்சனா | 149 | ற. நிஸ்கானா | 138 | வி.சாருஜா | 130 | சி .பதுசா | 118 |
| க.நிதுஸ்சனா | 158 | வி.தனுசிகன் | 149 | கா.சாளினி | 137 | சி.கயலவன் | 130 | சி.அமிர்தா | 116 |
| சா.சுயன் | 158 | ரா.ரசிகரன் | 146 | கு.றேனுஜா | 136 | உ..பிருத்திகா | 129 | ம.சரணிகா | 115 |
| ச.அச்சுதன் | 158 | வி.ஜதுசன் | 145 | சி.சந்துஜன் | 134 | சி.நிரோஜன் | 129 | க.ரவிராஜ் | 112 |
| ம.சருஜன் | 158 | ப.சானுஜன் | 145 | ர.சுயந்தன் | 132 | ச.விதுர்ஜீவன் | 129 | அ.ஜெதுசன் | 109 |
| ந.வாகினி | 154 | செ.கதிரொளி | 144 | இ.விதுசன் | 131 | ச.கமல்ராஜ் | 125 | வ.விதுர்சன் | 97 |
| செ.லக்ஷனா | 154 | ஞா.குருபரன் | 143 | அ.அக்சயா | 131 | சு.யோகீசன் | 124 | சி.விதுர்சிகா | 92 |
| சு.சர்மியா | 153 | அ.கனுசியா | 140 | உ.டிலக்சன் | 131 | நா.ரஜீவன் | 123 | சி.நிதர்சன் | 89 |
| ம.டிலக்சன் | 152 | கா.தருணியன் | 139 | கி.வைஸ்ணவி | 130 | ச.விதுர்சன் | 120 | மு.நிதர்சன் | 88 |
| ந.தக்ஷாயினி | 149 | செ.திலக்சன் | 138 | யோ.ஆரபி | 130 | க.கிந்துசன் | 118 | | |

எமது மாணவர்களையும்
மாணவர்களுக்கு அறிவூட்டிய
அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்
அனைவரையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்

பாராட்டுவோர்:
பெற்றோர்கள், விசுவநாதர் நிதியம்

# பட்டினிச்சாவிலிருந்து மாடுகளை மீட்க தற்காலிக மேய்ச்சல் தரவைகள் அறிவிப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போரின் மேய்ச்சல் தரவைபிரச்சினைக்கு மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்வுகாணப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் வை. தவநாதன் கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்கந்தபுரம் பகுதியில் கால்நடை வளர்ப்போரைச் சந்தித்து வழங்கிய உறுதிமொழிக்கமைய நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மேய்ச்சல் தரவைப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில், அக்கராயன், ஸ்கந்தபுரம், ஊற்றுப்புலம், கோணாவில் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் மேய்ச்சல் தரவை இன்மையால் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வாக, தற்காலிகமாக 2ஆம் கட்டை முதல் ஆனைவிழுந்தான் மற்றும் கொக்காவில் வரையான பகுதியை மேய்ச்சல் தரவையாக பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

இதில் வன இலாகாவின்கீழ் வரும் பகுதிகளையும் மேய்ச்சல் தரவையாக தற்காலிகமாகப் பயன்படுத்தி கால்நடைகள் பட்டினியால் சாவடையாமல் தடுப்பதற்கு மாவட்டச் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இது ஒரு தற்காலிகமான ஏற்பாடே எனவும், நீண்டகால அடிப்படையில் விரைவில் புதிய மேய்ச்சல்தரவைகள் கால்நடைகள் மேய்வதற்காக இனங்காணப்பட்டு வர்த்தமானி அறிவிப்புச் செய்ய ஏற்பாடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, கால்நடைகளுக்கான தீவனமாக புல்லு வளர்க்கும் திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இதையும் ஒரு வருமானம் தரும் தொழில் துறையாக முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பட்டி மாடுகளை பெரும் எண்ணிக்கையில் வளர்ப்போர் தாமே முன்வந்து காணிகளைப் பெற்று தமது கால்நடைகளுக்கான தீவனமாக புல் வளர்ப்பில் ஈடுபட வேண்டும் என்றும் இதன் மூலம், இனிவரும் காலங்களில் கால்நடைத் தீவனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வைக் காண முடியும் என்றும் தெரிவித்தார். (5-350)



கிளிநொச்சி உருத்திரபுரம் உதவும் கரங்கள் கனடா அமைப்பினால் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாத உருத்திரபுரம் மகா வித்தியாலய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்: ரகுபதி)

# கொலைக்குற்ற சந்தேக நபருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார் -மாந்தை மேற்கில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தொடர்ந்தும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதவான் எம். கணேசராஜா முன்னிலையில் சந்தேகநபர் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, சந்தேகநபர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்படுவார்.

கொலைச்சம்பவம் தொடர்பான விசாரணை குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால மேலதிக அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை எனவும் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சந்தேக நபர் தொடர்பான சட்ட மருத்துவ அறிக்கை, நீதிமன்றத்திற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்படும் என சிறைச்சாலைகள் அதிகாரிகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர். (5-285)

# "குளங்கள் வான் பாய்கிறது" எச்சரிக்கை விடுகிறது திணைக்களம்



(முறிகண்டி)

இரணைமடுக்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தாழ் நிலப்பகுதி மக்கள் அவதானமாகச் செயற்படுமாறும் கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடுக் குளம் அடைவு மட்டத்தை அடைந்து 2.5 அங் குலம் வான்பாய்ந்து வந்தது. இந்த நிலையில் மேலும் நீர்வரத்து அதிகரித்தமையால் ஆரம்பத்தில் இரண்டு வான் கதவுகளையும் பின்னர் மேலும் இரு வான் கதவுகளையும் 6 அங்குலம் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் சந்தர்பபத்தில் கதவுகளை திறப்பது தொடர்பிலோ தீர்மானிக்கப்படும் எனவும். இவ்விடயம் தொடர்பில் முழுமையான கண்காணிப்பு இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ள அனர்த்தம் தொடர்பான முன் னெச்சரிக்கைகள் ஏற்கனவே தொடர்ச்சியாக விடுக்கப்பட்டுவந்த நிலையில் பன்னங்கண்டி, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், கண்டாவளை, உமையாள்புரம் உள்ளிட்ட பகுதி மக்களை அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறி வுறுத்தியுள்ளது.

இதேவேளை நேற்றுக் காலை 6 மணி வாசிப்பின்படி கிளிநொச்சி நீர்ப்பாசன குளங்களான கல்மடுகுளம் 4 அங்குலமும், பிரமந்தனாறுக்குளம் 4 அங்குலமாகவும், கனகாம்பிகை குளம் 6 அங்குலமாகவும் வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அக்கராயன் குளமும், கரியாலை நாகபடுவான் குளம் 6 அங்குலமாக வும், புதுமுறிப்பு குளம் 3 அங்குலமும், குடமுருட்டி குளம் 6 அங்குலமும், வன்னேரிக்குளம் 3 அங்குலமும் வான் பாய்ந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குளங்களை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும், குளங்களை பார்வையிடுதல், நீராடுதல் மற்றும் மீன்பிடிப்பதில் ஈடுபடுதல் ஆகியவற்றை தவிர்க்குமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சியான மழை பெய் யும் சந்தர்ப்பங்களில் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் இடர் ஏதும் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம உத்தியோகத்தர் அல்லது இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் உதவியை பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

(5-100-316)



லண்டன் என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயத்தினால் முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 15 கிராமங்களைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கான உடுதுணிகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்: சதீஸ்)

# மீட்கப்படும் மனித உடற்பாகங்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளையில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவல்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இனம் காணப்பட்ட மனித உடல் பாகங்களை மீட்கும் பணிகள் நீதிமன்ற அனுமதிக்கு அமைவாக இடம்பெற்று வருகின்றது

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி ந.சுதர்சன் முன்னிலையில் குறித்த அகழ்வு மற்றும் மீட்புப் பணிகள்இடம்பெற்றுவருகின்றன.

குறித்த இடத்தில் தடயவியல் பொலிஸார் மற்றும் பொலிஸார் சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இணைந்து குறித்த உடற்பாகங்கள் மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (5-316)

# புத்தாண்டு சிறப்பு மலர் – 2021



## யாழ்.ஆயரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

2021ஆம் புதிய ஆண்டு மலருகின்ற வேளை இப்புத்தாண்டை கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு இறை ஆசீரையும் மனமகிழ்வையும் பாதுகாப்பையும் தரும் ஆண்டாக அமையட்டும் என வாழ்த்துகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் ஆண்டு முழுவதற்குமான அன்னையின் விசேட ஆசீரைப் பெற பணித்து நிற்கிறது. இறைவனின் அன்னை மரியாள் தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து எத்தீங்குமின்றி வழிநடத்தி எம் அனைத்துத் தேவைகளிலும் எம்மை நிறைவு செய்வாராக.

கடந்த ஆண்டு பல இன்ப துன்ப அனுபவங்களை நாம் பெற்று ஏற்றுக் கொண்டுள்ளோம். வருகின்ற புதிய ஆண்டிலும் இறைவன் தர இருக்கின்ற இன்ப துன்ப அனுபவங்களை இறை சித்தமாக ஏற்றுக் கொள்வோம்.

2020ஆம் ஆண்டு அனைவருக்கும் ஒரு துன்பமிக்க ஆண்டாகவே கடந்து சென்று உள்ளது. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களால் இலங்கையிலும் கொரோனா தொற்றால் உலகம் முழுவதிலும் பெரும் துயரம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் முடிவில்லாமல் கொரோனா தொற்று போய்க்கொண்டே உள்ளது. அதனைவிட இன்னும் வேறு வகை கொரோனா பரவுகிறது என்ற செய்தி பயமூட்டுவதாகவே உள்ளது.

இறைவன் உலக மக்கள் அனைவரையும் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்து இந்த தொற்று நோய் உலகில் இருந்து முற்றாக அகல வேண்டுமென பிரார்த்தியுங்கள். செபத்தால் மட்டுமே இந்த தொற்றுநோயை நீக்க முடியும் என நம்பி மத பேதமின்றி இறைவேண்டுதல் செய்யுங்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையும் அரசியல்கைதிகள் விடயமும் இன்னும் அரசால் தீர்க்கப்படாமலும் கவனிக்கப்படாமலும் உதாசீனம் செய்யப்பட்டும் வருவது வேதனைக்குரியது. அரசியல் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் இந்த விடயத்தில் இன்னும் அதிக கவனம் செலுத்தி அரசை செயற்பட வலியுறுத்த வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

2021ஆம் புதிய ஆண்டு அனைவருக்கும் இறை ஆசீரையும் மன மகிழ்வையும் பாதுகாப்பையும் தரும் ஆண்டாக அமையட்டும் என இறையாசீர் வேண்டுகிறோம்.


**கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
**யாழ். மறை மாவட்ட ஆயர்.**

## தித்திக்கும் புத்தாண்டே தேனிசை பாடி வருவாயே

புத்தம் புதுமலரே பூரித்தெழு புத்தாண்டே
போற்றினோம் நின்னை பூரிக்கும் மனதாலே
ஆர்த்தெழும் மக்கள் அனைவரும் கூடி
ஆன்மீக வழியில் அறிவைச் செலுத்தவும்
மொத்தக் குடிவாழ கொத்தியே வயல் முழுதும்
நித்தம் பணிபுரியும் உழவர்கள் வாழவும்
கத்தும் கடலில் காற்றிலும் மழையிலும்
கடலோடிப் பிழைக்கும் கடல் வணிகர் வாழவும்
தொத்த வரு நோய் பிணிகள் எமை அணுகாது
சுகம் தரும் வாழ்வைச் சுகிக்கவும்
நித்தம் விளையாடியின் புற்றிருந்து வாழ
தித்திக்கும் புத்தாண்டே தேனிசை பாடி வருவாயே

**கலாபூஷணம் மு.தணிகாசலம்**
**கற்கோவளம்.**



## செஞ்சொற் செல்வரின் புத்தாண்டுச் செய்தி

மனித வாழ்வு மகத்தானது. இந்த இனிய வாழ்வை நாம் புனிதமாக பேண வேண்டும். அன்பினால், பண்பினால், பரிவினால், தொண்டினால் ஆனந்தமாக வாழ அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். புதிய ஆண்டில் புதிய எண்ணங்களோடு பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஆவல் கொள்வோமாக. விடைபெறும் ஆண்டு உலகம் முழுவதும் கொரோனா அச்சத்தினால் மக்களை அல்லலப்படுத்திய ஆண்டாக வரலாற்றில் பதியப்பட்டு விட்டது. என் செய்வோம் .இயற்கையை யாரால் வெல்ல முடியும். கடவுள் உலகத்தை சிந்திக்க வைப்பதற்கு கண்ணுக்குத் தெரியாத கிருமியை அனுப்பியுள்ளார் போலும். கிரகத்திலும் வாழ்வோம் என இறுமாப்புக் கொண்ட மனிதனுக்கு கொரோனா எச்சரிக்கை செய்து விட்டது. உலகம் அச்சத்தில் மூழ்கியுள்ளது. சமய வரலாறுகளில் நோய்கள் பற்றிய செய்திகள் உண்டு. யுகங்கள் தோறும் இயற்கையின் சீற்றங்களாலும் நோய்களின் சீற்றங்களாலும் மக்கள் அழிவதும் அவலமுறுவதும் வழக்கமாகும். அனுபவத்தின் வாயிலாக மனித வாழ்வை செம்மைப்படுத்துவதற்கு இத்தகைய சூழ்நிலைகள் காலத்திற்கு காலம் ஏற்பட்டு வருவதனை நாம் காணலாம். எனவே அன்பு உறவுகளே! புதிய அனுபவத்தோடு புதிய ஆண்டை நாம் சந்திக்க போகிறோம். பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து மனிதாபிமானத்தை வளர்த்து வாழ்நாளை செம்மைப்படுத்த வேண்டியது எங்களின் தலையாய கடமையாகும். செல்வந்தநாடு, வறியநாடு, கல்வியில் உயர்ந்தநாடு என்றெல்லாம் நாம் பிரித்து ஆராய்வது உண்டு. ஆனால் இயற்கை எந்த வேறுபாடுமின்றி எல்லோர்க்கும் ஒரே நீதியை வழங்குகின்றது. தண்டிக்கின்ற போதும் தன் தண்டனையை பாரபட்சமின்றி வழங்குகின்றது. இதற்கு கொரோனா நல்ல உதாரணம். எனவே மாபெரும் சக்தியாகிய இறைவனுக்கு மதிப்புக் கொடுத்து எல்லோரும் வாழவேண்டும் என்ற உயர் பண்போடு நாம் வாழ வேண்டும். புதிய ஆண்டில் நல்ல திடசங்கற்பங்களை மனதில் இருத்தி செயற்படுவோமாக.

எங்கள் இலங்கைத் திருநாட்டில் தர்மம் நிலைக்க வேண்டும் என்று அனைவரும் பிரார்த்தனை செய்யுங்கள். **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று"** என்பதை அரசியல்வாதிகள் நன்கு உணரவேண்டும். ஒரு நாட்டின் தலைவன் பாரபட்சமின்றி அனைத்து மக்களையும் வழிநடத்த வேண்டும். இந்த அழகிய நாட்டில் எல்லோரும் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழலாம். உண்மையான மனித நேயம் உருவாகுமானால் வேற்றுமைகள் மறைந்துவிடும். என் செய்வோம் எங்கள் தமிழ் இனத்திடம் ஒற்றுமை என்பது கிடையாது. இதனால் நாம் இழந்தது ஏராளம். தன்தன் சுயலாபத்திற்காக பல்வேறு கட்சிகள் பல்வேறு குழுக்கள் என தோற்றம் பெற்று காலம் வீண்விரயமாகின்றது. எவரும் வெளிச்சத்தில் இல்லை. எவரிடமும் சத்தியத்தை காணமுடியவில்லை. புதிய ஆண்டில் கடவுளிடம் மன்றாடுவோம் எங்கள் இனத்திற்கு நல்ல விமோசனம் கிடைக்க வேண்டும் என்று.

கடந்த மார்ச் மாதம் முதல் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் கொரோனா சூழ்நிலையால் சீராக செயற்படவில்லை. எங்கள் இளம் சமுதாயம் இதனால் பல பாதிப்புக்களை சந்திக்க நேரிட்டுள்ளது. இதன் பாதிப்பை சமூகம் விரைவில் உணரும். புதிய ஆண்டில் இழந்த கல்விக் காலத்தையும் மீட்டெடுக்க வேண்டிய தேவை உண்டு. கல்விச்சமூகம் சுறுசுறுப்பாக இயங்கி எதிர்கால சந்ததியை காப்பாற்ற வேண்டும்.

அன்பர்களே! அஞ்சாதீர்கள்: புதிய ஆண்டில் நோய்களின் வேகம் தணியும். நாம் அஞ்சாது அறவழியில் வாழ ஆயத்தமாவோம். மருத்துவ சமூகம், விஞ்ஞான சமூகம் நல்ல பணியைத் தொடரட்டும். இறைவன் எங்களை மன்னித்து காத்தருள்வாராக, எல்லா சமயத்தவர்களும் பிறருக்கு இடையூறின்றி வாழ்வதை கற்றுக் கொடுக்க வேண்டும். புதிய ஆண்டு நல்ல வண்ணம் மலர ஒன்றுபட்டு பிரார்த்திப்போம்.

**"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது**
**கொல்லவல்ல கொல்லவல்ல**
**பொல்லா வினையறுக்க"**

என்ற ஞான வாக்கை அனைவரும் அறிவர். எனவே 2021ஆம் ஆண்டு நல்ல வண்ணம் அமையப் பிரார்த்திப்போம்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

## சந்தர்ப்பங்களை சாதகமாக்க புத்தாண்டை வரவேற்போம்

புலரும் புத்தாண்டே வா
புதுயுகம் படைத்திட வா
புதிய பாதையில் நடைபோட்டு
புதிய பயணங்கள் தொடர
கடந்த காலங்கள் கற்பித்த பாடங்களின்
அனுபவங்களை ஆசான்களாகி
சவால்களை வென்று சரித்திரம் எழுதுவோம்
சந்தர்ப்பங்களை சாதகமாக்கி
நம்பிக்கையோடு நற்பணிகள் மலர
புத்தாண்டை வரவேற்போம்
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**செ.யோசப்பாலா**
**செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்**

# புத்தாண்டு சிறப்பு மலர் – 2021


உலகத்தில் சகல இன்னல்களும் நீங்கி அனைவரின் வாழ்வும் ஒளியில் மலர்ந்திட பிரார்த்திப்போம்

L (முழுமையான சாரதி பயிற்சிகள் வழங்கப்படும்)

Reg.No.DS 882 அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
077 722 6247
021 221 7678
077 614 0361
sasikaLearners
sasikadrivingschool@gmail.com

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS

வாகன பயிற்சியாளர்களுக்கு நேர தாமதம் இன்றி பயிற்சி வழங்கப்படும்
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

வாகன விபத்தை தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்



(c-1057)

கிளைக் காரியாலயங்கள்

யாழ்ப்பாணம்
இல.281C, மணிக்கூட்டு கோபுர வீதி.
021 222 8004, 070 301 5004

வேலணை
வங்களாவடிச் சந்தி
021 221 5472, 070 301 3012

மல்லாகம் கே.கே.எஸ் வீதி.
021 224 3393, 070 301 3014

சங்கானை ஓடக்கரை வீதி.
021 225 1664, 070 301 3016

பண்டத்தரிப்பு கீரிமலை வீதி
021 225 2333, 071 255 4135

காரைநகர் பழைய கண்டி வீதி
021 225 2454, 070 510 2484

பருத்தித்துறை
பருத்தித்துறை வீதி நெல்லியடி.
021 226 0999, 071 775 0999

சாவகச்சேரி தபால் நிலைய வீதி.
021 227 0616, 071 577 0616, 077 732 3421

REGISTER





அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல்வடிவம்



வடக்கின் விவசாயப் புரட்சி

**North Lanka IIT City Campus**
**Faculty of Agriculture**

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by - S.A Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus,
Faculty of Agriculture.

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat,
Poonakary,
Kilinochchi.

Location -
Kariyalai Nakapaduvaan,
Poonakary Divisional.



NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
U.G.C அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்.

தகைமை - NVQ Level 04/ O/L / A/L
Duration: 03 Years
முழுநேரப் பயிற்சி
உடன் விண்ணப்பிக்கவும்.

(C:1049)

இப்பிரிவு மாணவர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் கட்டணம் Rs. 200 000. இலவசம்.

வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. தொடர்புகளுக்கு : 076 750 4535, 077 884 9677, 077 865 7957


## புத்தாண்டு பிறக்கட்டும்

புத்தாண்டு பிறக்கட்டும்!
புதுமையொளி பரவட்டும்!
சத்தான சமுதாயம்
சரித்திரத்தைப் படைக்கட்டும்!

கல்விநிலை யோங்கட்டும்!
களங்கமெலாம் கலையட்டும்!
வல்வினைகள் வாட்டட்டும்!
வளமுலகை யாளட்டும்!

உழுதொழில்க ளுயரட்டும்!
உயர்வதனால் உயிர்க்கட்டும்!
விழுதுகளாய் நின்றுலகை
வீறுடனே தாங்கட்டும்

கவிஞர், கலாபூஷணம்
கலைமாமணி யாழ்முத்து
கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.


NORTH LANKA IIT

Top Floor, People's Bank Building, Stanley Road Jaffna.

Approved Centre of Business University Costa Rica -
UGC & UNESCO Approved

2021 ஆம் ஆண்டுக்கான பாட நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்வரும் பாடநெறிகள் 2021 ஜனவரி மாதம்
ஆரம்பமாகவுள்ளன Online Cllasses மூலம்
இலங்கையின் எப் பாகத்திலிருந்தும் கற்க முடியும்.

**Computer Science**

i. B.Sc in Computer Science (Top Up 1 year) Entry Qualification: 02 Years Dip./HND-IT
ii. B.Sc in Computer Science (3 years) Entry Qualification: G.C.E (O/L) / (A/L)
iii. M.Sc in Computer Science (1 year) Entry Qualification: Any Degree

**B.Sc in Agriculture Science**

i. B.Sc in Agriculture Science(Top Up 1 year) Entry Qualification: Dip.in Agriculture (02 Years)
ii. B.Sc in Agriculture Science (3 years) Entry Qualification: G.C.E (O/L) / (A/L)
iii. M.Sc in Agriculture Science (1 year) Entry Qualification: B.Sc in Agriculture Science
iv. Ph.D in Agriculture Science(3 years) Entry Qualification: M.Sc in Agriculture

**Education**

i. B.Ed. (Top - Up) 01 Year Entry Qualification: Teacher's Training College/College of Education
ii. B.Ed. 03 Year Entry Qualification: G.C.E (A/L) 3 PASS
ii. D.Ed. (3 Years) Entry Qualification: M.Ed
iii. M.Ed. (1 Year) Entry Qualification: B.Ed./P.G.D.E
iv. PGDEM (1 Years) Entry Qualification: Any Degree

**B.Sc Guidance & Counselling**

i. B.Sc Guidance & Counselling (02 year)
Entry Qualification: Dipoloma (01 Years)

**B.Sc in Civil Engineering**

i. B.Sc in Civil Engineering (Top-Up-01 year)
Entry Qualification: Dip.in Civil Engineering (02 Years)

**Sports Science**

i. B.Sc in Sports Science Top -up (1 year)
Entry Qualification: Dip.in physical Education (02 Years)
ii. B.Sc in Sports Science (3 years)
Entry Qualification: G.C.E.(O/L), A/L
iii. M.Sc in Sports Science (1 year)
Entry Qualification: B.Sc in Sports Science

**Ph.D** Medium (Singala, English, Tamil)

i. Ph.D (3 years)
Entry Qualification: Any Master Degree

North Lanka IIT - Top Floor, People's Bank Building, Stanley Road Jaffna T.P. 076 750 4535 / 021 492 7088

Matale Lanka City Campus - Mr.C. Jeevaratnam 614/C, Main Street, Matale. Tel : 071 3476838/ 070 3199333

Hatton Lanka City Campus
(Top Floor Hatton Nersing Home ),
275, Dimpula Road, Hatton.T.P. 076 759 2666

Lanka City Campus Batticaloa.
(Opasite Open University)
T.P : 076 750 4535

Vavuniya Lanka City Campus
Station Road, Vavuniya
T.P. 076 488 6169

# புத்தாண்டு சிறப்பு மலர் — 2021






## இராசிபலன்

01.01.2021
மார்கழி 17, வெள்ளிக்கிழமை
துதியை முற்பகல் 10.02 மணிவரை
பூசம் முன்னிரவு 8.51 மணிவரை
சுபநேரம் 6.29-7.59 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை
சந்திராஷ்டமம்:-பூராடம், உத்தராடம்
உலக சமாதான தினம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூல முண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


மிதுனம்

உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்.


கடகம்

அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சந்தித்துக் கொள்வீர்கள்.


சிம்மம்

திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.


கன்னி

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு


விருச்சிகம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சிக்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு

காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


மகரம்

பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, மன திற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மீனம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த காரியங்களை மீதியும் செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்.

### ஜனாஸாக்கள் தகனம்

# இலங்கையை சவாலுக்குட்படுத்தப்போகும் பிரித்தானிய முஸ்லிம் சபை

(கொழும்பு)

கொரோனாவினால் மரணமானவர்களின் ஜனாஸாக்களைத் தகனம் செய்வதற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தை சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்போவதாக பிரித்தானியாவின் முஸ்லிம் சபை தெரிவித்துள்ளது.

கொரோனாவினால் மரணமாகும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மறுப்பது தமது மத நம்பிக்கைக்கு எதிரான செயற்பாடாகும் என்று பிரித்தானிய முஸ்லிம் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு அங்குள்ள முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின் படி கொரோனாவினால் மரணிப்போர் அடக்கம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம் கட்டாயத் தகனக்கொள்கையை கடந்த மார்ச்சில் இருந்து நடைமுறைப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை ஆட்சேபித்து சிறுபான்மைக்குழுக்கள் இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்த போதும் அது இந்த மாத ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் கொரோனாவினால் மரணிக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடலங்களை தகனம் செய்யும் செயற்பாடுகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று பிரித்தானியாவின் முஸ்லிம் சபை அந்த நாட்டில் உள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகரத்திடம் கோரியுள்ளது.

சர்வதேச சுகாதார நடைமுறையை மீறும் இலங்கை அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாகவும் அந்தச்சபை மேலும் எச்சரித்துள்ளது. (ஐ)

# தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த ஆலோசனை

(கொழும்பு)

**கிராம மட்டத்தில் புதிய தொழிலதிபர்களை உருவாக்கும் போது புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோருக்கான அறிவினை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துமாறு பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ விதாதா அதிகாரிகளி மற்றும் திறன் மேம்பாட்டு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.**



தற்போது இளைஞர்களுக்கிடையில் வேலையில்லா பிரச்சினை அதிகளவில் காணப்படுவதுடன் இவர்களுக்கான புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் இராஜாங்க அமைச்சு மற்றும் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு ஆகிய வற்றினால் செயற்படுத்தப்படும் 2021 வரவு-செலவுத் திட்டத்தை கிராம மட்டத்தில் செயற்படுத்துவதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறும் அவர் இதன்போது அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

விதாதா அதிகாரிகள் அற்ற பிரதேச செயலக அலுவலகங்களுக்கு பட்டதாரி பயிற்சியாளர்களின் ஆட்சேர்ப்பு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அனைவருக்கும் தொழிற்கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி, தொழிற்கல்விக்கான வாய்ப்புகளை அதிகரித்தல், வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தை மேம்படுத்தல், தொழிற்கல்வி நடவடிக்கைகளை பிரதேச ரீதியாக விரிவுபடுத்தல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இலக்காகக் கொண்டு தொழில்நுட்ப மற்றும் உயர் தொழிற்கல்வி வழங்குவது தொடர்பான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன. (ஐ)

### யுத்த காலத்தில் அடையாள அட்டையைப்போல

# தற்பொழுது முகக்கவசம் அவசியம்

## கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் எங்களுக்கு தேசிய அடையாள அட்டை எவ்வளவு முக்கியமாக இருந்ததோ, அதைவிட முக்கியமானது தற்பொழுது முகக் கவசம் என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் வெளியில் செல்லும்போது தங்களது முகக் கவசங்களை சரியான முறையில் அணிந்து போக வேண்டும்.

பலர் தங்களது தாடையின் கீழ் அணிந்து செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. உடம்பில் இருக்கின்ற மூன்று பகுதிகள் கொரோனா கிருமி நுழையக் கூடிய பகுதிகளாக இருக்கின்றது. ஒன்று கண், இரண்டாவது மூக்கு, மூன்றாவது வாய். ஆகவே நாங்கள் முகக் கவசத்தை சரியான முறையில் அணிய வேண்டும்.

தனிநபர் இடைவெளிகளை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும். இரண்டு நபர்கள் சேர்ந்து கதைக்கும் போது, கண்டிப்பாக சமூக இடை வெளிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகவே மக்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு கருதி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஏமன் விமான நிலையத்தில் குண்டு வெடிப்பு 26 பேர் பலி, 50 பேர் படுகாயம்

(ஏடன்)

**ஏமன் நாட்டின் ஏடன் விமான நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.**



ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுப்படையினருக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நடைபெற்று வருகிறது.

அரசுப்படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளிக்கின்ற அதேவேளை, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. இந்நிலையில், சவுதி ஆதரவுடன் புதிதாக அமைந்துள்ள ஏமன் அரசின் அமைச்சரவையில் பங்குபற்றியவர்கள் பயணித்த விமானம் அந்நாட்டின் ஏடன் விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் வந்தடைந்தது.

அமைச்சரவை உறுப்பினர்கள் வந்திறங்கிய சில நிமிடங்களில் விமான நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 50 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம், புதிதாக அமைந்துள்ள அரசை சீர்குலையச் செய்யவே ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஏமன் அரசு குற்றம் சுமத்தியுள்ளது. (நி)

# தி.மு.கவிற்கு எதிர் நாம் தமிழர் தான்

## சீமான் அதிரடி



(சென்னை)

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலினை எதிர்த்துப் போட்டியிடுவேன் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக சென்னையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், "ரஜினியின் முடிவை வரவேற்கிறேன். அவரது உடல்நலம் முதன்மையானது. அரசியல் ரீதியாக அவர் மீது கடுமையான சொற்களைப் பேசி உள்ளேன். அது அவரையோ, அவரது குடும்பத்தினரையோ ரசிகர்களையோ காயப்படுத்தி இருந்தால் வருந்துகிறேன். இனி எப்போதும் அவர் எங்கள் புகழ்ச்சிக்கு உரியவர்.

ஆசிய கண்டம் முழுவதும் அவரது புகழ் வெளிச்சம் பரவி கிடக்கிறது. அவருக்கு அரசியல் அவசியம் இல்லை. அவர் இளம்வயதிலேயே அமைதியை தேடி சென்றவர். இப்போது அவருக்கு கூடுதல் அமைதி தேவை.

அரசியலில், உட்கட்சி பிரச்சினையை சமாளிக்கவே சிரமமாக இருக்கும். அனைவரும் திட்டுவர். என்னை போன்ற ஒரு காட்டானாலேயே சமாளிக்க முடியவில்லை. அவரால் இதை தாங்க முடியாது. அதனால்தான் அவரை அரசியலுக்கு வர வேண்டாம் என்றேன்.

தி.மு.க. தலைவர் ஸ்ராலின் எந்த தொகுதியில் போட்டியிடுகிறாரோ அங்கு அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன். தி.மு.கவிற்கு மாற்று, நாம் தமிழர்தான். அ.தி.மு.க., அல்ல" என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் 28 வீரர்கள் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 28 வீரர்கள் உயிரிழந்தனர்.

சிரியாவின் டீர் அல்ஷோர் மாகாணத்தில் இராணுவ வீரர்கள் சென்ற பேருந்து மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். ஈராக் எல்லையை ஒட்டி உள்ள நெடுஞ்சாலையில் நடந்த இந்த தாக்குதலில் 28 வீரர்கள் உயிரிழந்ததாக அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பண்டைய நகரமான பல்மைராவுக்கு அருகில், பெரும்பாலும் சிரிய இராணுவமும் ஈரானிய ஆதரவு போராளிகளும் தங்கியிருக்கும் பகுதியில் இந்தத்தாக்குதலை பயங்கரவாதிகள் அரங்கேற்றி உள்ளனர். (நி)

# நோர்வேயில் நிலச்சரிவு 21 பேர் மாயம்

(ஒஸ்லோ)

நோர்வே நாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 21 பேர் மாயமாகியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பிரபலமான நாடு நோர்வே. இந்நாட்டில் பனிப்பொழிவு மிகவும் அதிக அளவில் இருக்கும்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அமைந்துள்ள கஜர்டர்ம் மாநகராட்சிக்கு உள்பட்ட ஆஸ்க் என்ற கிராமத்தில் 1,000 இற்கும் அதிகமானோர் வசித்து வருகின்றனர்.

ஆஸ்க் பகுதியில் நேற்று முன்தினம் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. இதனால், வீடுகளில் இருந்த பலரும் மண்ணுக்குள் புதைந்து மாயமாகினர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு மீட்புப்படையினர் நிலச்சரிவினால் மண்ணுக்குள் புதைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் இருந்த பொதுமக்கள் அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர்.

நிலச்சரிவால் சிறு காயங்களுடன் வீடுகளில் சிக்கிக் கொண்டவர்களில் 10 பேரை மீட்புப்படையினர் உயிருடன் மீட்டனர்.

ஆனால், இன்னும் 21 பேர் மண்ணுக்குள் புதைந்திருக்கலாம் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். இதனால், மாயமானவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (நி)

# தடுப்பூசி போட்டுக் கொண்ட தாதிக்கு ஒரு வாரத்தின் பின் கொரோனாத் தொற்று

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பைசர் தடுப்பூசியைப் போட்டுக்கொண்ட தாதி ஒருவருக்கு தடுப்பூசி போட்ட ஒரு வாரத்துக்கு பின்னர் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வரும் அமெரிக்காவில் கொரோனாத் தடுப்பூசி மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. கொரோனா வைரஸை ஒழிப்பதில் 95 சதவீதம் செயற்றிறன் கொண்ட பைசர் நிறுவனத்தின் தடுப்பூசி முதற்கட்டமாக முன்கள பணியாளர்களுக்கும் வயதில் மூத்தவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பைசர் தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட தாதி ஒருவருக்கு தடுப்பூசி போட்ட ஒரு வாரத்துக்குப் பின்னர் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தடுப்பூசி போட்ட 6 நாட்களுக்குப் பிறகு அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் கொரோனா பரிசோதனை செய்தார். இதில் அவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது.

தடுப்பூசி போட்ட ஒரே வாரத்தில் தாதிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்க மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# பீதியைக் கிளப்பிய மர்மப் பெண்ணின் குறிப்பு



(பல்கேரியா)

வலிமையான டிராகன் ஒட்டுமொத்த மனித குலத்தையே கைப்பற்றும் என்று மர்மப் பெண் பாபா வங்கா தெரிவித்த கணிப்பு ஒன்று காட்டுத் தீயாய் பரவி பீதியை ஏற்படுத்தியுள்ளது.

பாபா வங்கா பல்கேரியன் நாட்டை சேர்ந்த கண் தெரியாத பெண் 85 வயதில் அதாவது 1996 ஆம் வருடம் இவர் இறந்துவிட்டார்.

இவர் கடந்த 50 வருடங்களில் 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு தகவல்களை முன்கூட்டியே கணித்து சொன்னவர். இவர் சொன்னதில் 85 சதவீதத்துக்கும் பலித்தும் உள்ளது. இப்போதும் அவை நடந்து வருகின்றன.

**2021 ஆம் ஆண்டு நடப்பது என்ன?.**

2021 ஆல் இந்த உலகம் சில பேரழிவுகளை சந்திக்கும் என்று கணித்து வைத்துள்ளார். அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதி மர்ம நோயால் பாதிக்கப்படுவார் என்றும் கூறியுள்ளார்.

மேலும் அடுத்த 200 ஆண்டுகளுக்குள் மனிதர்கள் வேற்று கிரகவாசிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று கணித்துள்ளார்.

அந்த வகையில் மனிதர்கள் ஏலியன்களுடன் தொடர்பு படுத்திகொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# ரஷ்யா சீனாவிடமிருந்து கொவிட் தடுப்பு மருந்தை பெறுவதற்கு அரசு முயற்சி

## சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இயங்கும் கொவக்ஸ் நிறுவனத்திடமிருந்து தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து விட்டு, அதனை ரஷ்யா அல்லது சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இயங்கும் கொவக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொவிட் - 19 தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வதற்கு டிசெம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

எனினும் தற்போது வறிய நாடு என்று அடையாளப்படுத்தப்பட்ட சுமார் 90 நாடுகளுக்கு தடுப்பு மருந்தை இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான வாய்ப்புக்கள் காணப்பட்டாலும் கூட, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் முற்படாமல் இருப்பதன் காரணமென்ன? என்பதை ஆராய வேண்டும்.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற விதத்திலேயே செயற்படுகின்றது.

இது குறித்து எதிர்வரும் காலங்களில் மேலும் பல் வேறு தகவல் களை வெளிப்படுத்துவோம் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ஐ)

## சபாநாயகர் அலுவலகம் மூடல்

(கொழும்பு)

சபாநாயகரின் அலுவலகத்தை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் வாகனத்திற்கு முன்னால் செல்லும் வாகனத்தின் சாரதி மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோருக்கு கொரோனா வைரஸ்-தொற்றியுள்ளதே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 31.10.1945

மறைவு 02.12.2020

அமரர், திருமதி
**மங்களம் சிங்கராசா**

(எமது பாடசாலை ஆசிரியை
திருமதி.புஸ்பவதி சிவகுமார்
அவர்களின் தாயார்)

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய 31 ஆம் நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (5103)

பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் இந்துக்கல்லூரி.

**BRITISH COLLEGE OF ENGLISH**

**IELTS** OUR TARGET IS BAND : 09
ACADEMIC
GENERAL
LIFE SKILLS - A1/ B1

* வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
* நாங்கள் IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF ENGLISH**
Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)
Tel: 021 222 0384, 077 880 3887

(5096)

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு . தியாகராசா மகேஸ்வரன்**

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ். - கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரும்)

காரை மண்ணின் கார்மேகம் காற்றோடு கலந்து போனதேனோ பதின்மூன்று ஆண்டுகள்
நிலைபதியாய் நிற்கதியாய் நினைவோடு வாழ்ந்தாலும் மனம் ஆறா வடுக்களாய் வருடுகிறோம் என்
தந்தையே...

பிஞ்சுகுழந்தையாய் கொஞ்சி விளையாடி தோள்தனில் சாய்ந்து மடிதனில் தவழ்ந்து
அப்பா அப்பா... என்று ஓடி வருகையில் வாரியணைத்த
உன் கரங்கள் சுகமாக உறங்கிய உறக்கம் நிரந்தரமாய் கலைந்து போனதே என் தந்தையே...

உழைப்பால் உயர்ந்து உத்தமராய் வாழ்ந்து ஊருக்கே உரமாகி போனதேனோ...
பயமறியா உண்மைகளை உரக்கச்சொல்லி ஊரார் பணியாற்றி தமிழினத்தின் மிடுக்கானீர்களே
என் அப்பா.. எனக்கில்லை

சைவம் போற்றிடும் சாளரமாய்... ஈழவர் அடையாளமாய் உலகம் பறைசாற்றும்
உயர்விடமாய்...நந்திகொடிதனை எமக்கென நிலைநாட்டி உயிர்தனை
உரமாக்கி ஊமையாய் உறங்குகின்றீர்களே...எங்களை ஒரு கணம் நினைத்தீர்களா அப்பா...

இறைவடிவமாய் ஈஸ்வரன்... மக்களின் மனதில் குடிகொண்ட மகேஸ்வரன்...
அளப்பரிய சேவைகள் அர்த்தமுள்ள பேச்சுகள் பொறுப்பான பதவிகள் வீரதீர செயல்கள்
சீற்றம் கொண்ட கயவர்களின் நயவஞ்சகம் ... உதிரவெள்ளத்தில் உறங்கிப்போனது
தந்தையின் மூச்சு... உயிரற்ற ஜடங்களாய் விழிதுடைத்து வீரன் என்று பெருமிதம்
கொண்டாலும்... என் அப்பா எனக்கில்லையே...

பொட்டிழந்து பூவிழந்து என் அன்னை. கலங்கயிலே...விழிநிரப்பி கண்கலங்கி
அழுது நிற்கையிலே என் அப்பா எமக்கில்லை இனி என்ன வாழ்க்கை என்று
இடிமிழந்த மடிதனில் இதயம் கனத்த சுமைகளாய் உங்களின் நினைவுதனை சுமந்து கனவுதனை
நிஜமாக்க வாழ்வோடு போராடும் உங்களின் உயிர்கள் என்றும்
உங்களின் ஆத்மா சாந்தியடையட்டும்.

**பிள்ளைகள்:-**
பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்)

தகவல்:- திருமதி.விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
தொலைபேசி - 011 2360679

இல.276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 2221877

(5131)

# 7 மாத காலக்கெடு ஆட்சிக்கு விதிப்பு

(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கம், எல்லாப் பக்கங்களிலும் தோல்வியடைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினர் வசந்த சமர சிங்க, இந்த அரசாங்கம் இன்னும் 7 மாதங்களுக்கு மட்டுமே ஆட்சியில் இருக்கும் என எதிர்வுகூறியுள்ளார்.**


ஏழு மாதங்களின் பின்னர், அரசாங்கம் வீழும்.

அதனால்தான் அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் நாளுக்கு நாள் மரணிக்கும் போது அரசாங்கம் தனது தோல்வியை மறைக்க தேர்தல் பெறுபேறு களைக் காட்ட முயற்சி எடுக்கிறது.

அந்த முயற்சியை எதிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் (ஐ)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## ஆரோக்கியம் தரும் ஆலய வலம்

(தொடர்ச்சி)

அது மட்டுமின்றி பிரகாரங்களில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் முற்பிறவிகளில் நாம் செய்த எல்லா தீய வினைகளையும் அழித்து விடத் துணை செய்யும். இத்தகைய அருமையான பிரகார வலத்தை நாம் விட்டு விடலாமா?

பிரகாரத்தை வலம் வருவதற்கு என்று சில விதிகள் உள்ளன.

பிரதட்சணம் செய்யும் போது கைகளை வீசிக் கொண்டு வேகம் வேகமாக நடக்கக்கூடாது. அடி மேல் அடி எடுத்து வைப்பது போல நடக்க வேண்டும். அதாவது ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் தன் தலையில் எண்ணெய்க் குடத்துடன் நடந்தால் எவ்வாறு மெதுவாக, கவனமாக நடப்பாரோ அதுபோல நடக்க வேண்டுமாம்.

அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் கவனம் முழுக்க எண்ணெய்க் குடம் மீது இருப்பது போல நமது கவனம் முழுவதும் இறைவன் மீது மட்டுமே பதிந்து இருக்க வேண்டுமாம்.

அடுத்து முக்கியமான இன்னொரு விடயம் பிரகாரத்தை வலம் வரும்போது சள...சள...வென்று பேசிக் கொண்டு வரக்கூடாது. நிறைய பேர் தொழில் தொடர்பான பேச்சுக்கள், தொலைக்காட்சித் தொடர்கள் பற்றி பிரகார வலம் வரும் போது பேசுகிறார்கள். இது எந்தப் புண்ணியத்தையும் தராது.

அண்மைக்காலமாக பிரகாரங்களைச் சுற்றும்போது பலரும் செல்போனில் பேசிக் கொண்டே நடக்கிறார்கள். இதற்குப் பிரகாரத்தைச் சுற்றாமலே இருக்கலாம். பிரகாரத்துக்குரிய புனிதம் தெரியாதவர்கள்தான் இப்படி நடந்து கொள்கிறார்கள். பிரகாரங்கைளச் சுற்றும்போது பிற செயல்கள் எதுவும் இல்லாமல் தெய்வப் பாடல்களைப் பாடி வரலாம். கடவுள்களின் நாமங்களை ஸ்லோகங்களை உச்சரித்தபடி வரலாம். பிரகாரத்தைச் சுற்றி முடிக்கும் வரை உங்கள் உதடு இறைவன் திருநாமத்தை மட்டுமே உச்சரிக்க வேண்டும்.

பிரகாரத்தைப் பொதுவாக குறைந்தது மூன்று முறை வலம் வருவது நல்லது. முடிந்தவர்கள் 5, 7, 9 என்ற எண்ணிக்கையில் வலம் வரலாம். ஒவ்வொரு தடவையும் வலம் வரும்போது ஒவ்வொரு பிரார்த்தனையை இறைவனிடம் வைக்கலாம்.

முதல் முறை வலம் வரும்போது பாவம் நீங்க வேண்டிக்கொள்ளலாம். இரண்டாவது முறை பிரகாரம் சுற்றும் போது இறை அருள் முழுமையாகக் கிடைக்கப் பிரார்த்தனை செய்யலாம். மூன்றாம் முறை வலம் வரும்போது நமக்குள்ள முக்கிய தேவைகளில் முதன்மையானதை வேண்டுகோளாக வைக்கலாம். இப்படி ஒவ்வொரு தடவை வலம் வரும்போதும் ஒவ்வொரு பிரார்த்தனை செய்வது நல்லது.

பிரகாரம் வலம் வரும் போது எந்த இடத்திலாவது கோபுரம் நிழலோ கொடி மரம் நிழலோ இருந்தால் அதன் மீது காலடி படாமல் ஒதுங்கி நடக்க வேண்டும். மூலவருக்குத் திரை போடப்பட்டு அபிஷேகம், நைவேத்தியம் நடந்து கொண்டிருக்கும் போது நாம் பிரகார வலம் வரக்கூடாது.

சாமிக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து முடிப்பதற்குள் பிரகாரத்தைச் சுற்றி வந்து விடலாம் என்று சிலர் ஏதோ வலம் வருவதை வேலை மாதிரி நினைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கி விடுவார்கள். ஒருபோதும் அந்தத் தவறைச் செய்து விடாதீர்கள்.

சிலர் பிரகாரம் வலம் வரும்போது நந்தி, பலி பீடம், கொடி மரத்தைச் சேர்த்து வலம் வராமல் சோம்பல் பட்டு அதற்கு முன் பகுதியில் குறுக்கே புகுந்து நடந்து சென்று விடுவார்கள். மூலவருக்கும் பலி பீடத்துக்கும் இடையே குறுக்கே ஒரு போதும் நடக்கக்கூடாது என்று காலோத்தரம் ஆகமத்தில் கூறப் பட்டுள்ளது.

கருவறையைச் சுற்றியுள்ள முதல் பிரகாரத்தில் நிறைய சந்நிதிகள் இருக்கும். எனவே அந்தப் பிரகாரத்தில் மெல்ல நடக்க வேண்டும் என்றும் மற்ற பிரகாரங்களில் வழக்கமான நடைவேகத்தில் நடக்கலாம் என்றும் ஒரு குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பிரகாரத்தை வலம் வரும்போது நமது வாய் இறைவனின் நாமத்தை முணுமுணுக்கும். மனம் முழுமையாக இறைவனிடம் ஒன்றிவிடும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## போதையில் சாரத்தியம் 82 பேர் கைது

(மட்டக்களப்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் நேற்று மட்டும் நிறைவடைந்த காலப் பகுதியில் 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கடந்த 20 ஆம் திகதி முதல் தற்போதுவரை 1398 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்துகளில் 50 பேர் உயிரிழந்துள்ளதுடன், 132 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஐந்து நாட்களுக்கு காத்தான்குடி முடக்கம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு நேற்று முதல் எதிர்வரும் ஐந்து தினங்களுக்கு முடக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட 549 கொவிட் அன்டிஜன் பரிசோதனையின்போது 26 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இதனாலேயே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

## மினியால் 65 வீடுகள் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சந்திவெளி பாலையடித்தோனா கிராமத்தில் உள்ள 65 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்து உள்ளதாக அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

சேதமடைந்துள்ள வீடுகளை முழுமையாக புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கையினை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை பெற்று நட்ட ஈட்டினை வழங்குவதற்கான நடவடிக்கையினை மிகவும் தீவிரமாக செய்து வருகின்றனர்.

நட்புறவு கிராமத்தில் கடந்த 28 ஆம் திகதி பெய்த கடும் சுழி காற்றுடன் கூடிய மழை காரணமாக பகுதியளவில் 65 வீடுகள் சேதமடைந்துள்ளமை குறிப்பிடததக்கது. (ஐ)

## மா அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி பெண்ணொருவர் பலி

(கொழும்பு)

வெலிகந்த அசேலபுர பகுதியில் அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மா அரைக்கும் இயந்திரத்தில் வேலை செய்துகொண்டிருந்த குறித்த பெண்ணின் தலைமுடி இயந்திரத்தில் சிக்கியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 40 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து வெலிகந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## 5 தொற்றாளர்கள் தப்பியோட்டம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த 5 பேர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை-கல்லேல பகுதியில் உள்ள கொரோனா நோயாளிகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனாத் தொற்றாளர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)



# சிறுவர் அரங்கம்

## பேராசை பெரும் நட்டம்



முல்லா ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரரிடம் உள்ள பெரிய பானையை கடனாகக் கேட்டார்.

பக்கத்து வீட்டுக்காரர் கொடுக்க மனமில்லாமல் பானையை முல்லாவிடம் கொடுத்தார்.

அடுத்த நாள் காலையில், 'உங்கள் பானை கர்ப்பமாக இருந்தது. நேற்று பிரசவம் முடிந்து உங்கள்பானை ஒரு குட்டிப்பானையை ஈன்றெடுத்தது எனச் சொல்லி பெரிய பானையுடன் சேர்த்து ஒரு குட்டிப் பானையை பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்தார் முல்லா.

பக்கத்து வீட்டுக்காரருக்கு முல்லாவின் செய்கை விநோதமாக இருந்தாலும் வரவை விட வேண்டாமென்று சும்மா இருந்து விட்டார்.

அதேபோல் மீண்டும் அவரிடமிருந்து ஒரு பெரிய பானையைக் கடனாக வாங்கி மறுநாள் அதே போல் அந்தப் பெரிய பானையுடன் சேர்த்து குட்டிப் பானை ஒன்றைக் கொடுத்து அந்தப் பெரிய பானைக்கு புதிய குழந்தை பிறந்திருக்கிறது என்று கொடுத்தார்.

அதனைப் பெற்றுக்கொண்ட பக்கத்து வீட்டுக்காரர் சந்தோஷம் அடைந்தார். அதற்கடுத்த வாரம் முல்லா பக்கத்து வீட்டுக்காரரிடம் பானையைக் கடனாகக் கேட்டவுடனேயே மனமுவந்து பானையைக் கொடுத்தார்.

இம்முறை முல்லா பானையைத் திருப்பி கொடுக்கவில்லை. பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் போய்க் கேட்டார்.

அதற்கு முல்லா மன்னிக்க வேண்டும். உமது பானை பிரசவத்தின் போது இறந்து விட்டது என்றார். உடனே பக்கத்து வீட்டுக்காரர் என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? என்று கேட்டார். அதற்கு முல்லா நான் ஏமாற்றவில்லை.

பானை கர்ப்பமாக இருந்து குட்டி போட்டது என்று நான் உங்களிடம் குட்டிப் பானையைக் கொடுத்த போது வாங்கிக் கொண்டீர்கள் அல்லவா என்றார்.

அது உண்மை என்றால் இப்போது பானை இறந்தது என்பதும் உண்மை என்றார். பக்கத்து வீட்டுக்காரர் எதுவும் பேசமுடியாமல் அங்கிருந்து சென்றார்.

**நீதி: பேராசைப்பட்டால் நட்டம் தான் மிஞ்சும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




**ஓர் இடத்தில் யுத்தம் செய்யப் போகிறோம் என்று முடிவு செய்துவிட்டால் அதன் பூகோள அமைப்பை முற்றிலுமாகத் தெரிந்துகொண்டுவிட்டார் அலெக்சாண்டர். அப்படியே அவருடைய மனத்தில் அது பதிவாகிவிடும்.**

**ஒரு தெரு, ஒரு மலை, ஓர் ஆறு, ஒரு குட்டை, ஒரு கடல் என்று எதையுமே விட்டுவிடமாட்டார். இது தான் யுத்தத்தைச் செயற்படுத்த சிறந்த வழியாக இருக்கும் என்பது அலெக்சாண்டரின் கருத்து. அதற்கான முயற்சியில் புத்தகங்களை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தார்.**

**பாரசீகத்துக்குள் அடியெடுத்து வைக்க வேண்டும் என்றால் முதலில் ஹெல்லஸ்பாண்டைக் கடந்தாக வேண்டும். அதற்கான சுலபமான வழியைக் காட்டினார் தளபதி பார்மீனியோ.**

**காற்றின் வேகத்துக்கு ஈடு கொடுத்துச் சென்று கொண்டிருந்தது நதி. இருந்தாலும் அதை இலாவகமாகக் கடக்கும் அளவுக்குத் திறமை வாய்ந்த தளபதி பார்மீனியோ இருந்ததால் நதியின் வேகத்தை வீரர்கள் பொருட்படுத்தவில்லை. ஒருவர் பின் ஒருவராகக் கடந்தனர்.**

**அடுத்தது கிரேனிகஸ் ஆற்றைக் கடக்க வேண்டும். ஆனால் அது அத்தனை சுலபமில்லை. அலெக்சாண்டர் தன் பரிவாரங்களுடன் வந்து கொண்டிருக்கிறார் என்ற விடயம் தெரிந்ததுமே தன்னுடைய படையை கிரேனிகஸ் ஆற்றங்கரையில் குவித்து வைத்திருந்தார் பாரசீகப் பேரரசர் மூன்றாம் டேரியஸ்.**

**அலெக்சாண்டர் வீரர்களிடம் சொன்னார். கிரேனிகஸ் ஆற்றங்கரையில் நாம் சந்திக்க இருப்பவர் அசுரபலம் படைத்தவர். நம்முடைய படைகளைக் காட்டிலும் அவருடைய அளவில் அபரிமிதமானது. ஆற்றைக் கடக்கவும் வேண்டும். ஆபத்தும் அதிகம் தான்.**

**உயிருக்கு உலை வைக்கக்கூடிய விடயம் தான். ஆனாலும் ஆபத்து இல்லாமல் எந்தச் சாதனையையும் நிகழ்த்த முடியாது. ஆற்றைக் கடப்போம். அப்போதுதான் மூன்றாம் டேரியஸுடன் யுத்தம் செய்ய முடியும்.**

**அவரை வென்றால் தான் அடுத்தடுத்து முன்னேற முடியும். இலக்குகள் நிறைய இருக்கின்றன வாருங்கள். உத்வேகத்துடன் செல்வோம் உலகையே வெல்வோம். (தொடரும்)**

> உலகில் எப்படி வாழ்வது என்பதையாவது தெரிந்து கொள்ளும் அளவுக்கு உன்னை நீயே அறிந்து கொள். அதுவே வாழ்க்கையில் நீ அடையத்தக்க பெரும் பேறு. – சிமிலி ப்லாண்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிறக்கின்ற 2021 புத்தாண்டில் தர்மம் உலகெலாம் பரவட்டும்

2021ஆம் ஆண்டு இன்று பிறக்கின்றது. பிறக்கின்ற புத்தாண்டில் அனைவரும் இன்புற்று வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக.

இந்த உலகம் இறைவனின் படைப்பு. ஓரறிவு, ஈரறிவு என்ற வகைமைப்படுத்தலில் ஆறறிவு படைத்த மனிதர்களே அன்பு, கருணை, இரக்கம், கடவுள் நம்பிக்கை என்ற உயர் சிந்தனைகளைக் கொண்டவர்கள்.

உண்மை எது? பொய் எது? தர்மம் எது? அதர்மம் எது? எனப் பகுத்தாய்ந்து தர்மத்தின் வழியில் உண்மையாக – கடவுளுக்கு விசுவாசமாக வாழுதல் என்ற கோட்பாட்டைத் தம் வாழ்வியல் அணிகலனாக வகுத்துக் கொண்டு வாழுகின்ற பேராற்றல் மனிதர்களுக்கு மட்டுமே உண்டு.

எனினும் ஆறறிவு படைத்த மனிதர்கள் ஏழாவது அறிவாகிய ஞானானந்தத்தை அடைய வேண்டியவர்களாக இருந்த போதிலும் அவர்கள் ஐந்தறிவு கொண்டவர்களாகக் கீழிறங்குவதைப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதிலும் வேதனை; உலகம் முழுவதற்கும் உதாரணபுருஷர்களாக விளங்க வேண்டிய ஆன்மிகத் தலைவர்களும் ஆட்சியாளர்களும் படுமோசமாக நடந்து கொள்ளும்போது இனி இந்த உலகம் உய்வது கடினம் என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு அதர்மம் தலைவிரித்தாடுகிறது. கொடூரம் கோலோச்சுகிறது. மிருகத்தனம் தாண்டவமாடுகிறது.

அன்பு, பரிவு, இரக்கம், பிறர்க்கு உதவும் மனப் பக்குவம் என எதுவுமில்லாமல் வாழுகின்ற மனித சமூகம் உருவாகிவிட்டது.

இதற்கு வயது வேறுபாடு இல்லையாயினும் அறிவாற்றலின் உச்சத்தில் நின்று உலகை அன்புமயமாக்க வேண்டிய இளம் சமூகம் தன்னிடம் இருக்கக்கூடிய பேராற்றலைத் துஷ்பிரயோகம் செய்வது மிகப் பெரும் அபத்தம்.

ஆம், வீதி விபத்தில் சிக்கி வீழ்ந்து கிடந்து துடிக்கின்றவனை கையடக்கத் தொலைபேசியில் படம் எடுக்கின்ற அளவில் இளம் சமூகம் இரக்கத்தை விற்றுத் தீர்த்து விட்டது.

எந்த வார்த்தைகளாலும் பிறரைத் திட்டித் தீர்பதற்கான மிகச் சிறந்த சாதனமாக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்ற அநாகரிகம் மகிழ்வைத் தருவதாயிற்று.

இந்நிலையில் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கி, எங்கும் கொடூர மரணங்கள், அக்கிரமங்கள் மலிந்து போயின.

அநீதியின் உச்சத்தில், உலகம் முழுவதும் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறது.

இதிலிருந்து மீள்வதற்குத் தர்மத்தைப் பின்பற்றுவதே ஒரே வழியாகும்.

ஆக, பிறந்துள்ள 2021ஆம் ஆண்டில் உலகெங்கும் தர்மம் ஓங்கட்டும். அன்பு மலரட்டும். அகிம்சை விளையட்டும்.

மண்ணில் நல்ல வண்ணம் மனித குலம் வாழட்டும். அதற்காகப் பாடுபடுவோம்.

# தமிழ் மக்கள் எதிர்பார்த்த உரிமைகள் மாகாண முறைமை ஊடாக கிடைக்கவில்லை

## கஜேந்திரகுமார் எம்.பி சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எதிர்பார்த்த உரிமைகள் எதுவும் மாகாண சபை முறைமை ஊடாக கிடைக்கவில்லை எனவும் இதனால் தானும்மாகாண சபை முறைமையை எதிர்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

எனினும் பௌத்த பிக்குகள் மாகாண சபை முறைமைக்கு எதிராக கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கும் தனது நிலைப்பாட்டுக்கும் முற்றிலும் வேறுபாடு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாகாண சபை முறைமையில் ஆரம்பத்தில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை. மாகாண சபை முறைமைக்கு அப்பால் சென்று அதிகார பரவலாக்கலை கொண்ட வேலைத் திட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இதனால், மாகாண சபைக்கு அப்பால் செல்ல வேண்டுமே அன்றி மாகாண சபை முறைமை ஒழிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு கிடையாது. அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடு. சில இனவாத பௌத்த பிக்குகள் இதனை புரிந்துகொள்ளாது செயற்பட்டு வருவது குறித்து வருத்தப்படுகிறேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும்சம உரிமையுள்ள நாடு. சிங்களவர்களை தவிர ஏனைய இன மக்களை சமமான நிலையில் கருத முடியவில்லை என்றால், இந்த நாட்டை இனவாத நாடு என்று அடையாளப்படுத்த முடியும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 02 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பிரதேசத்திலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பரந்தனிலிருந்து பூநகரி ஊடாககௌதாரி முனை வரை, முட்கொம்பனிலிருந்து அரசபுரம் வரை, நெற்பிலவு, பள்ளிக் குடா, செம்மண்குன்று, ஞானிமடம், கறுக்காய்தீவு, 5V படைப்பிரிவு, பிரதேச செயலகம் பூநகரி, 66 வது படைப்பிரிவு பூநகரி, 66 வது படைப்பிரிவு 2 பூநகரி, இரணைமடு விமானப்படை முகாம் I மற்றும் II, வித்தியாபுரம், தட்டையார்மலை, முத்து விநாயகபுரம், முத்தையன் கட்டு, கனகரட்ணபுரம், 13, SLNG முத்தையன் கட்டுக்குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# கொரோனாவுடன் புதிய ஆண்டில் காலடி

## எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அஜித் ரோகண வேண்டுகோள்

(கொழும்பு)

நோய்த் தொற்றுடனேயே, 2021ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதால் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

எனவே, சுகாதார வழிகாட்டல்களை அவசியம் பின்பற்ற வேண்டும் என பொதுமக்களிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேநேரம், விருந்து பசாரங்களை குடும்பத்தினருடன் மாத்திரம் மட்டுப்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

தொற்றை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் பொதுப் போக்குவரத்து சேவை, சந்தைகளில் பொருள்கொள்வனவின்போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார். (ஞா)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாதுகாப்பும் மாற்றமும்

எது தற்காலிகமானதோ, சிறியதோ, அழியக் கூடியதோ அதற்குத்தான் பாதுகாப்புத் தேவை. எது நிரந்தரமானதோ, பெரியதோ, பரந்துள்ளதோ அதற்குப் பாதுகாப்புத் தேவையில்லை.

உங்கள் உடலுக்குத்தான் பாதுகாப்பு தேவை: ஆன்மாவுக்கு அல்ல. உங்கள் மனதிற்கு பாதுகாப்புத் தேவை; உங்கள் ஆன்மாவுக்கு அல்ல.

பாதுகாப்பு என்றாலே இருக்கும் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்று அர்த்தம். பாதுகாப்பு மாற்றத்தைத் தடுக்கிறது. பாதுகாக்கப்பட்ட நிலையில் மாற்றம் நிகழாது. அதே சமயத்தில் பாதுகாப்பு அல்லாமல் விருப்பமும் நிகழாது. ஒருவிதை செடியாக மாறப் பாதுகாப்பு தேவை. ஒரு செடி மரமாகப் மாறப் பாதுகாப்பு தேவை. பாதுகாப்பு மாற்றத்திற்கு உதவியும் செய்யலாம். இடையூறும் செய்யலாம். ஆனால் எந்தளவு பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டும் என்று பாதுகாவலருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

பாதுகாப்போடு கூடிய மாற்றத்தை ஆண்டவனின் அருள்தருகிறது. என்று ஒருவர் சொல்கிறார்.

உண்மைக்கு எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை. பாதுகாப்பு, மாற்றம் இரண்டும் காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்டவைகள். காலத்தை விஞ்ச இந்த விதிகள் மதிக்கப்படவேண்டும்.

நாம் பாதுகாக்கப்பட்டவர்கள்; அதேசமயத்தில் மாறுதலுக்கு உட்பட்டவர்களும் கூட. அதுவே ஹரி மற்றும் ஹர. பாதுகாப்பவர் ஹரி, மாற்றம் ஏற்படச் செய்பவர் ஹர.

அழியும் தன்மையுயை பாதுகாப்பு, காலம் என்னும் வரையறைக்குட்பட்டது. ஒரு மருத்துவர் எவ்வளவு காலம் ஒருவரைக் குணப்படுத்த, பாதுகாப்பு முடியும்? எப்போதுமா? இல்லையே.

அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் பாதுகாப்பு தேவையில்லை. ஏனெனில் அவை தற்காலிகமானவை அல்ல.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இறைவனையன்றி வேறு மற்றவர்களுக்குக் கோயிலில் அட்டாங்க வணக்கம்செலுத்தக்கூடாது. ஆலயங்களில் சூரிய, சந்திர வடிவங்களை அமைத்து பண்டைக்காலத்தில் வழிபட்டு வந்தார்கள். ஆலயங்களில் நவக்கிரக பிரதிஷ்டை 200 ஆண்டுக்குப் பின்னரே தோன்றியது. (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஐயப்ப பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகள்

❖ ஐயப்பனாக மாலை தரித்த நேரத்திலிருந்து குருசாமியை முழு மனதுடன் ஏற்று அவர் தம் மொழிகளை தேவவாக்காக மதித்து மனக்கட்டுப்பாட்டுடன், பணிந்து நடந்து யாத்திரையை இனிதாக்க ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

❖ நீலம், கருப்பு காவி இவற்றுள் ஏதாவது ஒரு நிறத்தில் உடைகள் அணிய வேண்டும்.

❖ தங்கள் கடமைகளை ஆற்றுகின்ற சமயங்களில் அணிய இயலாவிட்டாலும் பஜனையில் கலந்து கொள்ளும் போதும் யாத்திரையின் போதும் முழுவதும் கண்டிப்பாக வண்ண ஆடைகளை அணிவது அவசியம்.

❖ காலை, மாலை இருவேளைகளிலும் (சூரிய உதயத்திற்கு முன்பும் சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும்) குளிர்ந்த நீரில் தவறாமல் நீராடி ஐயப்பன் திருவுருவப் படத்தை வைத்து வணங்குதல் வேண்டும்.

❖ தினமும் ஆலய வழிபாடும், கூட்டுப் பஜனைகளிலும் கலந்து கொண்டு வாய் விட்டுக் கூவி சரணம் ஐயப்பன் புகழ்பாடி மகிழ்தல் பேரின்பம் நல்குவதாகும். (தொடரும்)

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை



**துலாம் இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று நான்காமிடத்திற்கு செல்கின்றார். இதை 'அர்த்தாஷ்டமச்சனி' என்று சொல்வது வழக்கம். அஷ்டமத்துச் சனி நடைபெறும் பொழுது, ஏற்படும் கெடுபலன்களில் சரிபாதி அளவு இக்காலத்தில் உருவாகும் என்பர். ஆனால் உங்கள் இராசிக்கான அதிபதி சுக்கிரன், சனி பகவானுக்கு நட்பு கிரகமாவார். எனவே பெரிய அளவில் கெடு

## நான்காமிடத்தில் சனி, நல்ல விரயங்கள் இனி!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

பலன்களைக் கொடுக்கமாட்டார். மேலும் கும்பம் அவருக்குச் சொந்த வீடு. உங்கள் இராசிக்கு சுகஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி பகவான், சுக ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப் போவதால் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். மகர இராசியில் ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அவரோடு இப்பொழுது சனி பகவான் சேர்வதால் 'நீச்ச பங்க இராஜயோகம்' உருவாகின்றது. எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். சுகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும்.

**தேவைக்கேற்ற பணம் வரும்**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கப்போகின்றார். இது தாய், சுகம், கல்வி விருத்தி, வீடு, இடம், வாகனம் போன்றவற்றைக் குறிப்பதாகும். அந்த இடத்தில் அடியெடுத்து வைக்கும் சனி பகவான் நல்ல பலன்களை வழங்குவார். மகர இராசி அவருக்கு சொந்த வீடாகும். ஆயுள்காரகன் என்று சனியை வர்ணிப்பதால், உங்களுக்கும் உங்கள் தாய்க்கும் உடன் பிறப்புகளுக்கும் உடன் இருப்பவர்களுக்கும் உடல் நிலையில் சிறுசிறு தொல்லைகள் வந்து விலகும். பொருளாதாரத்தில் தேவைக்கேற்ற பணம் வரும். எதிலும் கூட்டு முயற்சி உகந்தது. கல்வி, கட்டடப்பணி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடிவரும்.

**சனியின் பார்வை பலன்கள்**

உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், உங்கள் இராசியையும் 6, 10 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். உடல் ஆரோக்கியம், செயற்றிறன், கௌரவம், எதிர்ப்பு, வியாதி, கடன் சுமை, மனக்குழப்பம், பங்காளிப் பகை, தைரியம், தொழில், ஜீவனம், அரசுப்பணி, வணிகம் போன்றவற்றை எடுத்துரைக்கும் இடங்களில் எல்லாம் சனியின் பார்வை பதிவதால், அதற்கு ஏற்ப பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். குறிப்பாக உங்கள் இராசியைச் சனி பார்ப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் மிகவும் கவனம் தேவை. அலைச்சலை குறைத்துக்கொள்ளுங்கள்.

சனியின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால், உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் வாக்குவாதங்கள் வந்து அலைமோதும். இருப்பினும் சனி உங்கள் இராசிநாதனுக்கு நட்புக் கிரகம் என்பதால் கடைசியில் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். 'உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே' என்று ஒருசிலர், உத்தியோக மாற்றத்திற்கு ஏற்பாடு செய்யலாம். விருப்ப ஓய்வு பெற்று வெளிவந்து கூட்டு முயற்சியில் சுயதொழில் தொடங்கவும் வாய்ப்புகள் கைகூடி வரும். கூட்டாளிகள் ஜாதகத்தில் சஷ்டாஷ்டம தோஷம் இல்லாமல் இருப்பதைக் கவனித்துக் கொள்வது நல்லது.




சனியின் பார்வை பத்தாமிடத்தில் பதிவதால் தொழில் ஸ்தானம் புனிதமடைகின்றது. பழைய தொழிலில் சில மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். சூரியன் உங்களுக்கு இலாபாதிபதியாகவும் விளங்குவதால் தொழில் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறும்.

28.12.2021 முதல் 26.1.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் வந்து சேரும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும்.

27.1.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சுபகாரியங்கள் மிக விரைவில் முடியும். செவ்வாய் உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால் குடும்பம் ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற வரன்கள் மீண்டும் வரலாம். 'வீடு கட்டி வைத்தும் வாடகைக்கு ஆள் வரவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, நல்ல தகவல் வரப்போகின்றது. இக்காலத்தில் சனியும் கும்ப இராசிக்கு வருகின்றார். பஞ்சம ஸ்தானம் புனிதமடைவதால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு உயர் பதவி எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 5 ஆம் இடத்திற்கு குரு வருகின்றார். அப்பொழுது குரு உங்கள் இராசியைப் பார்க்கப் போகின்றார். எனவே திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 'ஆறில் குரு ஊரில் பகை' என்பதால் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கலாம். எதையும் யோசித்துச் செய்வது நல்லது. மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது மிகச் சிறந்த பலன்கள் வந்து சேரும். குருவின் நேரடிப்பார்வை பதிவதால் தொட்டது துலங்கும், தொல்லைகள் அகலும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைவீர்கள்.

**ராகு-கேது பெயர்ச்சிக்காலம்**

21.3.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஜென்மத்தில் கேதுவும் 7 இல் ராகுவும் சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சப்தம ராகுவின் ஆதிக்கத்தால் கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.

8.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். மறைந்த ராகுவால் நிறைந்த பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றமும் சலுகைகளும் கிடைக்கும்.

**வெற்றி பெற வைக்கும் வழிபாடு**

சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதோடு, இல்லத்து பூஜை அறையில் பஞ்சமுக அனுமன் படம் வைத்து, அனுமன் கவசம் பாடி வழிபடுவது நல்லது. ராமதூதன் வழிபாடு சேமிப்பை உயர்த்தும்.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, 25.5.2022 முதல் 9.10.2022 வரை, 27.6.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார். இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வீண் பழிகள் ஏற்படும். குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் உருவாகலாம். இல்லம் கட்டுவதில் தடை ஏற்படலாம். எதையும் துணிந்து செய்ய



இயலாது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய பெயர்ச்சியாகும். அதிக விரயத்தைச் சந்திக்கும் பெயர்ச்சியாகவும் அமையப் போகின்றது. தன்னம்பிக்கை, தைரியம், தளராத உழைப்பு ஆகிய மூன்றும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும். கணவன் -மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். தாய் மற்றும் சகோதரர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் வழியிலும் விரயம் உண்டு. கடன் பிரச்சினை ஏற்படாமல் இருக்க சிக்கனத்தைக் கையாளுங்கள். பணிபுரியும் பெண்கள் கொடுத்த வேலையை முறையாகச் செய்தால் நல்ல பெயர் எடுக்கலாம். பிறரிடம் ஒப்படைத்தால் பிரச்சினைகள் உருவாகும். (தொடரும்)

## புதைக்கப்பட்ட...

யில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை, புங்கன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றின் வளாகத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

24 வயதுடைய திருமணமாகாத பெண் ஒருவர் குருதிப்போக்குக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு குழந்தை பிறந்துள்ளமை தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதுதொடர்பில் இளம் பெண்ணின் வீட்டுக்கு நேற்றைய தினம் சென்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி, திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன்போது சிசு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

சிசு இயற்கையாக உயிரிழந்ததா? அல்லது கொலை செய்யப்பட்டதா? என்பது தொடர்பில் சட்ட மருத்துவ பரிசோதனையின் பின் தெரிய வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## கிராமசேவகரின்...

சுழிக்குள் அகப்பட்டு காணாமல்போன கிராம அலுவலர் நேற்று வியாழக்கிழமை காலை அரிப்பு பழைய தோணித்துறை பகுதியில் சடலமாக கரை ஒதுங்கியுள்ளது.

காணாமல்போய் தற்போது சடலமாக மீட்கப்பட்ட கிராம அலுவலர் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தோமஸ்புரி கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலராக கடமையாற்றும் ஜனார்த்தனன் (வயது-26) என தெரிய வந்துள்ளது. (ஞா-285)

## 8 வான் கதவுகள்...

இதனால் மேலும் இரண்டு கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இரணைமடு நீரேந்து பிரதேசங்களில் வாழ்கின்ற கண்டாவளை மற்றும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஞா-100)

## 5 பேர் பலி...

என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 204ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நாட்டில் நேற்று 597 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 43 ஆயிரத்து 299 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## இலங்கையில்...

டிக்கை, இலங்கை தமிழர்களின் சுய மரியாதையை அழிக்கும் நடவடிக்கையென குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இந்த நடவடிக்கை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்று பிரதமர் எச்சரிக்க வேண்டும். மாகாண சபைகளை ஒழிக்க இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சி, தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகும் என்று தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, தமிழர்களின் உரிமைகள், சுய மரியாதை மற்றும் கௌரவத்தை இழந்து விட்டார்கள் என்றும், இந்திய மத்திய பாஜக அரசு ஒரு ஊமை பார்வையாளராக இருந்து வருவது கவலைக்குரியது என்றும் தெரிவித்துள்ளார். (ஞா)

## உடுவிலைச்...

உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்ட 20ஆவது நாளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 131ஆக உயர்வடைந்துள்ளது. (ஞா-18)

## 20 ரூபாய்...

வங்கியினால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் 20 ரூபாய் நாணயக் குற்றி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் W.D.லக்ஷ்மன் நாணயக்குற்றியை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 20 ரூபாய் நாணயக்குற்றி வெளியிடப்பட்டுள்ளது. (ஞா)

## கையூட்டு பெற்ற...

குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்ற புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கட்சித் தலைமை...

எதிராக செயற்படுவது குறித்து விரைவில் செயற்குழுவில் ஆராய்வோம். சுமந்திரனிற்கான பதில் 2ஆம் திகதி வழங்கப்படும் என அதிரடி அறிவித்தல் விடுத்துள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.

நேற்று யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில், கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமந்திரன் கடிதம் எழுதியது பெரிய விடயமல்ல. இப்படித்தான், கடந்த பொதுத் தேர்தல் முடிந்ததும் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி எனக்கு எதிரான கருத்துக்களை சொன்னார். இப்பொழுதும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

கட்சியின் செயற்குழுவை கூட்டி இதைப் பற்றி பேச வேண்டும். கடிதத்திற்கு பதிலளிக்க வேண்டுமா? இல்லையென்பதை நான்தான்தீர்மானிக்க வேண்டும். ஆனால் பதிலளிக்க வேண்டும் என்றார். (ஞா-33)

## சந்தை...

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் டிசம்பர் மாதத்தில் நேற்று வரை 153 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து 135 பேர், வவுனியா மாவட்டத்திலிருந்து 10 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேர், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 2 பேர், மன்னார் மாவட்டத்திலிருந்து ஒருவர் அடையாளம் காணப்பட்டனர்.

மருதனார் மடம் சந்தையை மீள திறக்குமாறு சில கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புடைய 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சந்தைகளை மீள திறப்பது ஆபத்தானது. தொற்று பரவல் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர்தான் மருதனார் மடம் சந்தை மற்றும் ஏனைய சந்தைகளை மீள திறக்க ஆலோசனை வழங்குவோம் என்றார். (ஞா)

## முதல்வருக்கு...

என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் சபையின் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

அத்தோடு தனது மாதாந்த ஊதியம், எரிபொருள் கொடுப்பனவை வழங்குமாறு கேட்டுள்ள அவர், அதனை சபையின் பொதுப் பணிகளுக்கு செலவிட திட்டங்களை வகுக்குமாறு கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 23 ஆவது முதல்வராக சட்டத்தரணி வி. மணிவண்ணன் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையால் இதுவரை காலம் முதல்வருக்கு வழங்கப்பட்டு வந்த வாகனத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்று அறிவித்துள்ள சட்டத்தரணி வி.மணிவண்ணன், ஊதியம், எரிபொருளுக்கான கொடுப்பனவைப் பெற்று சபையினால் முன்னெடுக்கப்படும் பொதுப் பணிகளுக்கு செலவிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு தனது நிலைப்பாட்டை அவர் நேற்று தெரியப்படுத்தினார். (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1647 திகதி 2020.12.31
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 26 50 53 65

மெகா பவர்
திகதி 31/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0720
C 25 26 43 47 51

மஹஜன சம்பத
திகதி 2020/12/31
சீட்டிழுப்பு இலக்கம் 4353
U 9 9 9 6 4 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 31.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2648
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 05 60 61 64

தன நிதானய
திகதி - 2020.12.31
சீட்டிழுப்பு இலக்கம் - 390
Q 33 58 59 75

அத கோடிபதி
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1149
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 31.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 94,843,900
வெற்றி இலக்கங்கள் 19 59 62 67 W

சனிதா
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3479
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 31.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,327,018
வெற்றி இலக்கங்கள் 06 09 18 48 J

ராசி
சுப்பர் ஜக்பொட் 26,75,551/=
திகதி: 31.12.2020
வெற்றி வாரம்: 3030
வர்ணம்: மண்ணிறம்
வெற்றி இலக்கங்கள் 22 31 49 51 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 97,47,420

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1323 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 31/12/2020 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 47 52 58 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,758,787

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 397 திகதி 31.12.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 47 52 62 விதி எண் 3
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,331,132
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்



### பொன்னம்பலம் மகேந்திரராஜா

(கணக்காளர் - ஓட்டோஸ் கம்பனி, யாழ்ப்பாணம், முன்னாள் முகாமையாளர் - இராஜேந்திரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

பிறப்பு 01.08.1938 | இறப்பு 31.12.2020

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வைத்தியசாலை வீதி, சங்கானை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேந்திரராஜா நேற்று (31.12.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தன்கேணியைச் சேர்ந்த பொன்னம்பலம் - மகேஸ்வரி (இராசாத்தி) தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (சில்க் பரடைஸ்) - செல்லம்மா (சங்கானை) தம்பதியரின் மூத்த மருமகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குபேந்திரராஜா (லண்டன்), இராஜேஸ்வரி (வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சயந்தறூபன் (ஆசிரியர் - யாழ்/ உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலை), ஹேமறூபன் (அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்), பிரணவறூபன் (கணக்காளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் கஜலக்ஷ்மி (ஆசிரியை - யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), ஷாமிலா (உதவிக் கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிதியா, அஞ்ஜனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இல. 193/9, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5140)

இல. 193/9. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.

021 221 7259
077 379 5703
077 521 3247

தகவல்:- குடும்பத்தினர்

## முட்டையின் விலையை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதால் அதன் மொத்த விற்பனை விலை 12 ரூபாவால் குறைக்கப்படும் என முட்டை உற்பத்தி சங்கத்தின் தலைவர் சரத் அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், தற்போது சந்தையில் முட்டையின் மொத்த விலை 14 ரூபாவாக உள்ளது. இவ்வாரம் மொத்த விலை 12 ரூபாவாக குறைக்கப்படும். நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 70 இலட்சமாக காணப்பட்டது.

தற்போதைய உற்பத்தி 85 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முட்டையின் சில்லறை விலையினையும் குறைக்க பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார். (ஞா)

New SCIENCE UNIVERSE
PHYSICS
Zoom Online Class
2021, 2022 & Repeat Batch
Monthly Fees 1000/- Only
From - 03.01.2021
076 322 0916
(5126) அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL
(C-1051)

காணி தேவை
யாழ்ப்பாணம், நல்லூர்,மானிப்பாய்,கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் 10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணிகள் தேவை. (தரகர் தேவையில்லை) (5137)
076 221 2037

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
[ கோண்டாவில் சந்தியில் இருந்து 500 M தூரம் ]
(தரகர் தேவையில்லை)
(5137)
077 288 0152
077 505 8561

வகுப்பு
German, Swiss செல்பவர்களுக்கான டொச் வகுப்புக்கள் மற்றும் A1 பரீட்சைக்குரிய இலகுவான வழிகாட்டலும் மற்றும் Personal Class களும் கற்பித்துக் கொடுக்கப்படும்.
(C-1019)
தொடர்பு : 076 401 8564

அன்பொளி கல்வியகம்
கல்வியாண்டு - 2021
தரம் 3, தரம்4, தரம் 5 Zoom வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இணைய விரும்பும் மாணவர்கள் 076 174 7490 என்ற எண்ணுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
(1067)

புதிய கல்வியாண்டு - 2021
தரம் 6 முதல் O/L வரை
கணிதம்
ஆசிரியர் திரு. T. அற்புதராஜா 077 722 2478
ஆரம்பம் 02. 01. 2021 சனிக்கிழமை
202, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தற்போதைய சூழ்நிலையில் Zoom Class ஆக நடைபெறும். அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
O/L (2020 ) Paper Class நடைபெறுகின்றது.
(5126)

## 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவில்லும்



தோற்றம் 1945.10.31 | மறைவு 2020.12.02

அமரர்

### மாங்களம் சிங்கராசா

(மாவிட்டபுரம் - மருந்துக் கடை)

கடந்த 2020.12.02 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தாயாரின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (01.01.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும்.

அன்னார் மரணம் அடைந்த துயரச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களிற்கும் மலர் வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(கோவிட் - 19 கொரோனா சூழ்நிலை, சுகாதார நடைமுறை காரணமாக இந்நிகழ்விற்கு தாங்கள் யாவரையும் அழைக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.)

272/2, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(5118)

குடும்பத்தினர்

ஹோட்டல் மனேஜ்மன்ட்
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்


பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
2021 பதிவுகள் ஆரம்பம்
+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna.
(C-1061)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.